ISSN: 2582–5518




புதுகை
# வரலாறு
நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




சனி ❖ ஜனவரி. 13, 2024 | சென்னை & புதுக்கோட்டை | 6 பக்கம் ❖ வரலாறு 9 ❖ இதழ் 100 ❖ ரூ.10

### அமைச்சர் செந்தில்பாலாஜியின் ஜாமீன் மனு 3-வது முறையாக

# தள்ளுபடி

## ஜாமீனில் வெளியில் விட்டால் சாட்சிகளை கலைக்க வாய்ப்பு உள்ளதாக அமலாக்கத்துறை எடுத்து வைத்த வாதத்தை ஏற்று நீதிபதி உத்தரவு

**சென்னை , ஜன. 13–**

**ஜன. 13, சட்டவிரோத பணப்பரிமாற்ற வழக்கில் அமலாக்கத்துறையால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ள அமைச்சர் செந்தில் பாலாஜி சார்பில் தாக்கல் செய்யப்பட்ட ஜாமீன் மனு 3-வது முறையாக தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.**



தமிழக அமைச்சரவையில் மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சராக இருந்தவர் செந்தில் பாலாஜி. இவர் கடந்த அதிமுக ஆட்சியில் போக்குவரத்துத் துறை அமைச்சராக பதவி வகித்தார். அப்போது போக்குவரத்து துறையில் வேலை வாங்கி தருவதாகக்கூறி பணம் வசூல் செய்ததாக இவர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டது.

இதில் சட்டவிரோத பணப்பரிமாற்றம் நடந்ததாக கூறி அமலாக்கத்துறை விசாரணை நடத்தியது. இந்த விசாரணையின் முடிவில் ஜூன் 14-ம் தேதி அமைச்சர் செந்தில் பாலாஜியை அமலாக்கத்துறை அதிகாரிகள் கைது செய்தனர். தற்போது அமைச்சர் செந்தில் பாலாஜி புழல் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் ஜாமீன் வழங்கக் கோரி அமைச்சர் செந்தில் பாலாஜி ஏற்கெனவே 2 முறை தாக்கல் செய்த மனுக்களை சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

எனவே 3-வது முறையாக ஜாமீன் கோரி, செந்தில் பாலாஜி சார்பில் முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனு மீது அமைச்சர் செந்தில் பாலாஜி மற்றும் அமலாக்கத்துறை தரப்பு வாதங்கள் முடிந்த நிலையில் நேற்று தீர்ப்பு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டு இருந்தது.

அதன்படி நேற்று, செந்தில் பாலாஜி சார்பில் தாக்கல் செய்யப்பட்ட ஜாமீன் மனு மீதான தீர்ப்பு வழங்கப்பட்டது. அதில், அமைச்சர் செந்தில் பாலாஜியை ஜாமீனில் வெளியில் விட்டால் சாட்சிகளை கலைக்க வாய்ப்பு உள்ளதாக அமலாக்கத்துறை எடுத்து வைத்த வாதத்தை ஏற்று, மனுவை தள்ளுபடி செய்வதாக நீதிபதி உத்தரவிட்டார்.

## நீங்கள் எங்கு வாழ்ந்தாலும் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு துணையாக இருங்கள் – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேச்சு






சென்னை, ஜன. 13–

எனக்கு உடல்நலம் சரியில்லை என சிலர் கூறும்போது எனக்கு சிரிப்புதான் வந்தது என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறினார்.

அயலகத் தமிழர் மாநாட்டில் கணியன் பூங்குன்றன் பெயரில் 13 பேருக்கு தங்கப்பதக்கங்களை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கினார். அயலகத் தமிழர் தின விழாவின் 2-ம் நாளான நேற்று 'எனது கிராமம்' திட்டத்தையும் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்

அதன்பின்னர் விழாவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது:- எனக்கு உடல்நலம்சரியில்லைஎன சிலர் கூறும்போது எனக்கு சிரிப்புதான் வந்தது. எனக்கு எப்போதும் மக்களைப் பற்றிதான் நினைப்பு; என்னை பற்றி நான் நினைத்ததே இல்லை. தமிழர்களும், தமிழ்நாடும் மகிழ்ச்சியாக இருப்பதே எனக்கு போதும். தமிழர்கள் மகிழ்ச்சியாக இருப்பதை பார்க்கும்போது எனக்கு என்ன குறை இருந்துவிடப் போகிறது.

நான் எப்போதும் மக்களுடன் இருப்பவன்; என் சக்தியை மீறி உழைக்கிறேன். ஒரே மாதத்தில் அரசு மொத்தம் ரூ.8,000 வழங்கியதாக மக்கள் கூறுகின்றனர். தாய் மண்ணிற்கு உங்களை வரவேற்பது மகிழ்ச்சி அடைகிறேன். முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார் என்ற பொன்மொழியே தமிழர்கள் கடல் கடந்தும் கோலோச்ச உந்துதலாக இருக்கிறது.

தேர்தல் அறிக்கையில் கூறியபடி அயலகத்தமிழர் நலத்துறையை திமுக அரசு உருவாக்கியது. அயலகத் தமிழர் நலத்துறை சிறப்பாக செயல்பட்டு வருகிறது. அயலகத் தமிழர் நல வாரியம் மூலம் உங்களின் தேவைகள் உடனுக்குடன் நிறைவேற்றபடுகின்றன. அயலகத் தமிழர்களின் குழந்தைகளுக்கு அரசு சார்பில் தமிழ் கற்று தரப்படுகிறது.

தமிழ்நாட்டை வளப்படுத்த நடந்தது முதலீட்டாளர் மாநாடு; உலகமே வளம் பெற நடப்பது அயலகத் தமிழர் மாநாடு. வெளிநாடுகளில் உள்ள தமிழர்கள் இங்கு முதலீடு செய்ய செய்ய ஏதுவான சூழல் உருவாக்கப்பட்டு வருகிறது. நாம் அனைவரும் ஒரே இனத்தைச்சேர்ந்தவர்கள். தமிழ் அன்னையின் குழந்தைகள்; எங்கு வாழ்ந்தாலும் தாய் தமிழ்நாட்டை மறக்காதீர்கள். அடிக்கடி உங்கள் குழந்தைகளோடு தமிழ்நாட்டுக்கு வாருங்கள்; கீழடி, பொருநை, ஆதிச்சநல்லூரை காட்டுங்கள்; தமிழோடு இணைந்திருங்கள்; நீங்கள் எங்கு வாழ்ந்தாலும் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு துணையாக இருங்கள் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறினார்.

## "உதயநிதியை துணை முதல்வராக்க நடக்கிறது பில்டப் திருவிழா" – அண்ணாமலை விமர்சனம்



சென்னை, ஜன. 13–

"தமிழக முதல்வரைப் பொறுத்தவரை தெளிவாக இருக்கிறார். சேலம் இளைஞரணி மாநாடு முடிந்த பின்னரோ அல்லது நாடாளுமன்றத் தேர்தலுக்கு பின்னரோ, எப்படியாவது உதயநிதி ஸ்டாலினை துணை முதல்வராக்க வேண்டும் என்று. அதற்கான ஒத்திகைதான் தற்போது நடக்கும் நிகழ்ச்சிகள் எல்லாம். உதயநிதி ஸ்டாலினுக்கான பில்டப் திருவிழா நடந்து கொண்டிருக்கிறது" என்று பாஜக செயல்வீரர்கள் கூட்டத்தில் பேசிய அக்கட்சியின் மாநிலத் தலைவர் அண்ணாமலை விமர்சித்துள்ளார்.

சென்னை சோழிங்கநல்லூரில், தென் சென்னை நாடாளுமன்ற தொகுதி பாஜக செயல்வீரர்கள் கூட்டம், அக்கட்சியின் மாநிலத் தலைவர் அண்ணாமலை தலைமையில் நேற்று நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் அண்ணாமலை பேசியது: "இந்திய வானிலை ஆய்வு மையம், மழை மற்றும் கனமழைக்கான முன்னறிவிப்புகளை வழங்குகிறது. மஞ்சள் எச்சரிக்கை எப்படி சிவப்பு எச்சரிக்கையாக மாறுகிறது என்பதை இங்கிருப்பவர்களுக்கு படிக்கத் தெரியவில்லை. அடிப்படை விஷயத்தை படிக்கத் தெரியவில்லை. அதை விவரிக்கத் தெரியவில்லை. ஒரு கமாண்டன்ட் ஜெனரல் ஏதாவது ஓர் அறிவிப்புக் கொடுத்தால், அதைக் கேட்டு கிரகித்து கட்டளைகளைப் பிறப்பிப்பதற்கான திறமை இல்லை.

தமிழக முதல்வர் ஸ்டாலினுக்கும், அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கும் ஒரு 4 விஷயங்களைக் கூறினால், அதைக் கேட்டு கிரகித்துக் கொண்டு நடவடிக்கை எடுக்கும் திறமை இருக்கிறது என்று நீங்கள் நினைக்கிறீர்களா? எனவே, குடும்ப ஆட்சி என்பது தமிழகத்தை மொத்தமாக சீரழித்துள்ளது. சிஸ்டம் முழுவதும் கெட்டுப்போய் உள்ளது. மாநிலத்தின் ஆட்சி துவங்கி, மேயர் வரை ஒட்டுமொத்தமாக சிஸ்டத்தைக் கெடுத்து இன்று தமிழகத்தை குட்டிச்சுவராக்கி வைத்துள்ளனர்.

தென் தமிழகத்தில் கனமழை பெய்தபோது, திருநெல்வேலி மேயர் எங்கிருந்தார் என்று தெரியுமா? சேலத்தில் நடைபெறவிருந்த திமுக இளைஞரணி மாநாட்டுக்கு பந்தல் போட்டுக் கொண்டிருந்தார். திருநெல்வேலியில் மழை பெய்தது. ஆனால், மேயர் அங்கு இல்லை. சரி, மழை வந்துவிட்டது. பாதிப்புகளை பார்வையிட யார் செல்ல வேண்டும்? உள்ளாட்சித் துறை அமைச்சர் கே.என். நேருவும், அமைச்சர் துரைமுருகனும் செல்ல வேண்டும். ஆனால், அங்கு சென்று யார் பார்த்தது, அமைச்சர் உதயநிதி ஸ்டாலின்.

காரணம், முதல்வரைப் பொறுத்தவரை தெளிவாக இருக்கிறார். சேலம் இளைஞரணி மாநாடு முடிந்த பின்னரோ அல்லது நாடாளுமன்றத் தேர்தலுக்கு பின்னரோ, எப்படியாவது உதயநிதி ஸ்டாலினை துணை முதல்வராக்குவதற்கு. அதற்கான ஒத்திகைதான் தற்போது நடக்கும் நிகழ்ச்சிகள் எல்லாம்.

ஃபார்முலா கார் பந்தயம், செஸ் ஒலிம்பியாட், ஏடிபி டென்னிஸ் உள்ளிட்ட நிகழ்ச்சிகளை நடத்தி போட்டோ எடுத்துக் கொள்கின்றனர். கோட் சூட் அணிந்தபடி இருக்கும் காட்சிகள் தொலைக்காட்சியில் வரவேண்டும். உதயநிதி ஸ்டாலின் அறிவாளி ஆகிவிட்டார் என்பது போல தமிழக மக்களுக்கு காட்டுகிறார்கள். எப்படி தமிழ் சினிமாவில் ஹீரோவை அறிமுகப் படுத்துவார்களோ அதுபோல, உதயநிதி ஸ்டாலினுக்கான பில்டப் திருவிழா நடந்துகொண்டிருக்கிறது.

முதல்வரின் கவனம் எல்லாம் ஆட்சியில் இல்லை. அவரது கவனம் அனைத்தும் உதயநிதியை துணை முதல்வராக கொண்டுவந்து முதல்வராக்குவதில்தான் இருக்கிறது. திமுகவைப் பொறுத்தவரை மிக எளிதாக முடிவுகளை எடுக்க முடியவில்லை. அறிவாலயத்தில் ஒரு நிமிடத்தில் முடிவெடுத்து, அதை தொண்டர்களுக்கு இரண்டு நிமிடத்தில் சொல்லி, தொண்டர்கள் அதை மூன்று நிமிடங்களில் ஏற்றுக்கொள்வார்கள். இப்படித்தான் அறிவாலயத்தில் முடிவுகள் எடுக்கப்படுகின்றன. காரணம், இங்கு ஒரு குடும்பம் மட்டும் ஆட்சியில் இருக்கிறது.

ஆனால், பாஜகவைப் பொறுத்தவரை அவ்வாறு இல்லை. சின்னச் சின்ன பிரச்சினைகளின் ஊடே ஜனநாயகத்தை வளர்த்து கட்சியை வளர்ப்பதுதான் பாஜகவின் அழகே. உலகிலேயே உண்மையான பரிபூரணமான தலையில் தொடங்கி கால் வரை முழுமையாக ஒரு ஜனநாயகம் இருக்கும் கட்சி பாஜகதான். அதனால், கட்சியிலும் இயற்கையாகவே பிரச்சினைகளும் அதிகமாகத்தான் இருக்கும். அண்ணாமலையால் கட்டளையிட முடியாது. அண்ணாமலையும் இந்தக் கட்சியில் ஒரு தொண்டன், ஒரு சேவகன்" என்று அண்ணாமலை பேசினார்.

## புதுக்கோட்டை தமிழ்சங்கத்தின் தலைப்பொங்கல் விழா சுவிச்சர்லாந்து நாட்டைச்சேர்ந்தோர் பங்கேற்று கொண்டாட்டம்





**புதுக்கோட்டை , ஜன. 13–**

புதுக்கோட்டை தமிழச்சங்கம் நடத்திய தமிழர் மரபுத் திருவிழா தமிழ்சங்கதலைப்பொங்கல் விழாவாக கொண்டாடப்பட்டது. புதுக்கோட்டை தமிழச்சங்கத்தின் தலைவர் கவிஞர் தங்கம்மூர்த்தி தலைமையில் மாவட்ட விளையாட்டு மைதானத்தில் நேற்று நடைபெற்ற தமிழ்ச்சங்கத் தலைப்பொங்கல் விழாவிற்கு மாட்டு வண்டியில் சீர்வரிசை கொண்டுவரப்பட்டது.

விழாவிற்கு சிறப்பு விருந்தினர்களாக தஞ்சாவூர் தமிழ்ப்பல்கலைக் கழகத் துணைவேந்தர் திருவள்ளுவன்,காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் சுப்பையா ஆகியோர் கலந்துகொண்டனர். தமிழச்சங்க தலைப்பொங்கல் விழாவைக்காண்பதற்காக சுவிச்சர்லாந்து நாட்டைச் சேர்ந்த நான்குபேர் விழாவில் பங்கெடுத்து உரியடித்தல், பம்பரம் விடுதல் போன்ற விிளாயட்டுகளி;ல் கலந்துகொண்டனர். அவர்கள் கூறும்போது இந்தியாவிற்கு வந்து நாங்கள் கலந்துகொள்ளும் முதல் விழா இந்தப் பொங்கல் விழாதான். எங்களை வரவேற்று பண்பாடு மாறாமல் ஆரத்தி எடுத்து மாலை அணிவித்துபொன்னாடை வழங்கினீர்கள். இந்த நாள் எங்கள் வாழ்நாளில் மறக்க முடியாத நாளாகும் என்று குறிப்பிட்டனர்.

சிறப்பு விருந்தினர்கள் பொங்கல் வைக்கும் நிகழ்வை தொடங்கி வைத்ததோடு பாரம்பரிய விளையாட்டுகளான உரியடித்தல் மற்றும் கிட்டி புல் ஆகிய விளையாட்டுகளை விளையாடினர். விழாவில் மறக்கப்படும் பாரம்பரிய விளையட்டுகளான இளவட்டக்கல், உரியடி, கயிறு இழுத்தல், பச்சைக்குதிரை, பல்லாங்குழி, தாயம், பரமபதம், கல்லாங்காய் ஆகிய விளையாட்டுகளை பள்ளி, கல்லூரி மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் ஆர்வமுடன் கலந்து கொண்டனர். அனைவருக்கும்இனிப்பான பொங்கல் வழங்கப்பட்டது. கோலப்போட்டி, இளவட்டக்கல் மற்றும் உரியடித்தல் ஆகிய போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசுகளும் மற்ற எல்லா போட்டிகளில் கலந்துகொண்ட அனைவருக்கும் பாராட்டுச்சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. விழாவில் கவிஞர்கள் சிகரம் சதீஷ், பீர்முகமது உள்ளிட்ட தமிழ்சங்க நிர்வாகிகள், பள்ளி, கல்லூரி மாணவர்கள், அறிஞர்கள், கவிஞர்கள் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர். நிகழ்வினை கவிஞர் மகாசுந்தர், பேராசிரியர் ராஜ நாராயணன் தொகுத்து வழங்கினர். புதுக்கோட்டை தமிழச்சங்கம் தொடங்கி முதல் நிகழ்வாக அமைந்த தலைப்பொங்கல் விழா அனைவரது பாராட்டுகளையும் பெற்றது.

## மௌண்ட் சீயோன் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில், 36–ஆம் ஆண்டு விளையாட்டு விழா

புதுக்கோட்டை , ஜன. 13–

புதுக்கோட்டை, மௌண்ட் சீயோன் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில்,

36-ஆம் ஆண்டு விளையாட்டு விழா கோலாகலமாக கொண்டாடப்பட்டது. விழாவின் சிறப்பு விருந்தினராக சர்வதேச கூடைப்பந்து வீராங்கனையும், தெற்காசிய விளையாட்டுப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்றவருமான தர்ஷினி சிறப்பு விருந்தினராகவும், புதுக்கோட்டை நகர காவல் ஆய்வாளர் மருது கௌரவ விருந்தினராகவும் கலந்துக் கொண்டனர்.

விளையாட்டு விழாவானது மாணவர்கள் இறைவணக்கப்பாடல் பாட, மௌண்ட் சீயோன் பள்ளிக் குழுமங்களின் துணைத் தலைவர்

ஏஞ்சலின் ஜோனத்தன் இறைவழிப்பாட்டுடனும், தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல் ஒலிக்க நிகழ்ச்சி துவங்கியது. மௌண்ட் சீயோன் பள்ளிக் குழுமங்களின் தலைவர் டாக்டர் ஜோனத்தன் ஜெயபரதன் வரவேற்புரை வழங்கினார். நிகழ்ச்சியின் தொடர்ச்சியாக சிறப்பு விருந்தினர் தேசியக்கொடியை ஏற்றிவைக்க, ஒலிம்பிக்கொடியை சிறப்பு கௌரவ விருந்தினர் ஏற்றினார். பள்ளிக் கொடியை பள்ளியின் தலைவர் ஏற்றி வைத்தார்.

சிறப்பு விருந்தினர்கள் மாணவர்களின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்கள். பின்னர் நல்லிணக்கணத்தின் அடையாளமாக சமாதானப் புறாவை பறக்கவிட்டு ஒலிம்பிக்ஜோதி ஏற்றி



விளையாட்டு விழாவினை துவங்கி வைத்தார்கள். சிறப்பு விருந்தினர் தர்ஷினி பேசுகையில் இலக்கை அடையும் வரை உழைக்க வேண்டும் என்றார். விடாமுயற்சி கண்டிப்பாக வெற்றிக்கு வழிவகுக்கும் என்றும் அவர் கூறினார். மாணவர்கள் மனதையும், உடலையும் கட்டுக்கோப்பாக வைத்துக் கொள்ளவும், விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு தொடர்ந்து உடற்பயிற்சி செய்ய அறிவுறுத்தினார்.

மௌண்ட் சீயோன் பள்ளிகளின் துணைத் தலைவர் அவர்கள் ஆண்டு விளையாட்டு அறிக்கையை வாசித்தார். பள்ளியின் கல்விமுதல்வர் குமரேஷ் நன்றியுரை வழங்கினார். நன்றியுரையைத் தொடர்ந்து 6 முதல் 8 ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களின் வரவேற்பு நடனம் வாயிலாக ஹாக்கி, கிரிக்கெட் ஈட்டி எறிதல் மற்றும் ஸ்கிப்பிங் போன்ற விளையாட்டுகளை நடனமாக காட்சிப்படுத்தினர். தொடக்கப் பள்ளி மாணவர்கள் ஜும்பா நடனம், வளையங்களை வைத்துக்கொண்டு நடனம் ,கராத்தே கலைகளை அரங்கேற்றினார்கள். உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் இந்தியாவின் விளையாட்டு பாரம்பரியத்தை சித்தரிக்கும் நடனங்களை ஆடினார்கள். மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் பிரமிட் மற்றும் மோனோசைக்கிள் சவாரி செய்தனர்.

மழலையர் வகுப்பு முதல் ஆரம்பப்பள்ளி வகுப்பு மாணவர்களின் பெற்றோருக்கு விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு அவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. இந்த மாபெரும் நிகழ்வில் மாணவர்களும் பெற்றோர்களும் கலந்து கொண்டு மகிழ்ந்தனர். இந்நிகழ்ச்சியை பள்ளி முதன்மை நிர்வாக முதல்வர் கிருபா ஜெபராஜ் ஏற்பாடு செய்திருந்தார்.

# இன்று

# 13-1-2024

திருச்செங்கோடு அர்த்தநாரீஸ்வரர் : கணவன் மனைவி ஒற்றுமை பலப்படுத்தும் திருத்தலம்.
சக வருடம் 1945 பௌஷம் 23

| சோபகிருது மார்கழி 28 | JAN - SAT சனி | ரஜப் 1 வளர்பிறை 013 / 353 |
|---|---|---|

வளர். துவிதியை 20.03 (மா. 02.35) திருவோணம் 24.16 (மா. 04.16) தியாஜ் 33.30 சித்த. திருப்பரங்குன்றம் ஸ்ரீஆண்டவர் வெள்ளி பூத வாகனத்தில் புறப்பாடு. சாத்தூர் ஸ்ரீவெங்கடேச பெருமாள் தோளுக்கினியானில் பவனி. இன்று கெருட தரிசனம் நன்று.

| | நல்லநேரம் | கௌரி நல்ல நேரம் | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|---|
| காலை | 7.30-8.30 | 10.30-11.30 | 09.00 | 06.00 | 01.30 |
| மாலை | 4.30-5.30 | 9.30-10.30 | 10.30 | 07.30 | 03.00 |

சூலம் : கிழக்கு; பரிகாரம் : தயிர்; கரணம் : 12-1.30
தனுர் லக்கனம் இருப்பு நா. 0 வி. 23; சூரிய உதயம் : 6.34
சந்திராஷ்டமம் திருவாதிரை புனர்பூசம்
முற்பகல் செய்யபின் பிற்பகல் விளைபடும்

| இராசிபலன் | |
|---|---|
| மேஷம் | பொறுமை |
| ரிஷபம் | நட்பு |
| மிதுனம் | செலவு |
| கடகம் | உற்சாகம் |
| சிம்மம் | நன்மை |
| கன்னி | விருத்தி |
| துலாம் | உழைப்பு |
| விருச்சி | நற்செயல் |
| தனுசு | அமைதி |
| மகரம் | ஆதாயம் |
| கும்பம் | போட்டி |
| மீனம் | ஆக்கம் |

## சிந்திப்போம்.... செயல்படுவோம்

“நீங்கள் எங்கிருந்தாலும், எத்தகைய சூழ்நிலைக்கு வெளிப்படுத்தப்பட்டாலும், ஒவ்வொரு சூழ்நிலையிலிருந்தும் நல்ல விஷயங்களை எடுத்துக்கொள்ளுங்கள். வாழ்வனுபவம் வீண்போக விடாதீர்கள்.”




# அரியலூரில் 10–ம் வகுப்பு மாணவ மாணவிகளுக்கு வினா விடை தொகுப்பு கையேடு வழங்கும் விழா



அரியலூர் : ஜன. 13, அரியலூரில் பத்தாம் வகுப்பு மாணவ மாணவிகளுக்கு, வினா விடை தொகுப்பு கையேடு வழங்கும் விழா நடைபெற்றது.

அரியலூர் அரசினர் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற்ற, மெல்ல கற்கும் பத்தாம் வகுப்பு மாணவ மாணவிகளுக்கு, வினா விடை தொகுப்பு கையேடு வழங்கும் விழா, பள்ளி கல்வித்துறை சார்பில், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் விஜயலட்சுமி தலைமையில் நடைபெற்றது. பள்ளி கல்வி ஆய்வாளர் பழனிசாமி அனைவரையும் வரவேற்றார். மாவட்ட கல்வி அலுவலர்கள் சுவாமி முத்தழகன், செல்வவிநாயகம் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.

அரியலூர் தமிழ் பண்பாட்டு பேரமைப்பு, ரெட்டிபாளையம் அல்ட்ராடெக் சிமெண்ட்ஸ், தளவாய் இந்தியா சிமெண்ட்ஸ் நிறுவனங்கள் சார்பில் தயாரித்து வழங்கப்பட்ட, வினா விடை கையேடுகள், பள்ளி மாணவ, மாணவிகளுக்கு வழங்கப்பட்டது. விழாவில் தமிழ் பண்பாட்டு பேரமைப்பு தலைவர் பாலகிருஷ்ணன், செயலாளர் கதிர் கணேசன், பொருளாளர் புகழேந்தி, அமைப்பு செயலாளர் நல்லப்பன், துணைத் தலைவர் புலவர் இளங்கோ, பாரி வள்ளல் மேல்நிலைப்பள்ளி தாளாளர் ராமநாதன், விவேகானந்தா விஷன்மாரிமுத்து உள்ளிட்டோர் பேசினார்கள்.

அரியலூர் அரசு மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் செல்வராஜ், பெண்கள் உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியை உமா, அல்ட்ராடெக் சிமெண்ட் ஆலை நிர்வாகி சிவக்குமார், மைன்ஸ் மேலாளர் காமராஜ், தமிழ் பண்பாட்டு பேரமைப்பு நிர்வாகிகள் ஜோதி ராமலிங்கம், செந்தில்குமார் மற்றும் மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

# அரியலூரில் அட்மா திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு பயிற்சி



அரியலூர் : ஜன. 13, அரியலூரில் அட்மா திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

இது பற்றி அரியலூர் வேளாண்மை உதவி இயக்குனர் சாந்தி வெளியிட்ட செய்திக்குறிப்பு : அரியலூர் மாவட்டம், அரியலூர் வட்டார வேளாண்மை துறையின் கீழ் செயல்படும், வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை திட்டத்தின் கீழ் (அட்மா), நெல்லுக்குப் பின் பயிறு சாகுபடி குறித்து, மாவட்ட அளவில் விவசாயிகளுக்கான பயிற்சி, கலைஞரின் ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சி திட்ட கிராமமான, உசேனாபாத் கிராமத்தில் நடைபெற்றது.

பயிற்சி வகுப்புக்கு தலைமை வகித்த, அரியலூர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் பாலையா, நெல்லுக்குப்பின் பயிரிடப்படும் பயிறு வகைகளை அறுவடை செய்யும் போது, வேர்களை மண்ணுக்குள் வைத்து அறுவடை செய்யும் பொழுது, மண்ணுக்கு கிடைக்கும் நன்மைகள் குறித்து விளக்கி கூறினார். மேலும் பஞ்சகாவியா மற்றும் மீன் அமிலம் பயன்படுத்தி, பயிர்களை இயற்கையான முறையில் பாதுகாத்திடும் வழிமுறைகள் குறித்து, விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினார்.

வேளாண்மை துணை இயக்குனர் பூவலிங்கம் பேசுகையில், விவசாயிகளுக்கு பயிற்சி நடத்துவதன் நோக்கம் மற்றும் வேளாண்மை துறையின் கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து விளக்கி கூறினார். வேளாண்மை உதவி இயக்குனர் சாந்தி பேசுகையில், இயற்கை விவசாயம் செய்வதன் முக்கியத்துவம், உயிர் உரம் மற்றும் நுண்ணூட்டம் பயன்படுத்துவதன் அவசியம் குறித்து எடுத்து கூறினார். மேலும் உர குறைபாடுகள் பற்றி கண்டறிந்து, அவற்றை நிவர்த்தி செய்வது குறித்தும் விளக்கிப் பேசினார்.

கிரீடு வேளாண் அறிவியல் மைய தொழில் நுட்ப வல்லுநர் திருமலைவாசன் பேசும்போது, விவசாயிகள் நெல் அறுவடைக்குப் பிறகு சாகுபடி செய்யும், உளுந்து, பாசிப்பயிர், எள் போன்றவற்றின் முக்கியத்துவம் குறித்து, விளக்கி பேசினார். தொடர்ந்து இயற்கையான முறையில், தழைச்சத்து கிடைக்கும் வழி வகைகள், கோடை உழவு செய்வதன் அவசியம் குறித்தும் பேசினார்.

உழவன் செயலி பயன்பாடுகளை, வேளாண்மை உதவி அலுவலர் வேல்முருகன் மற்றும் அட்மா உதவி தொழில் நுட்ப மேலாளர்கள் அன்பழகன், வசந்தி ஆகியோர் செய்து இருந்தனர் என்று அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.



தென்காசி தெற்கு மாவட்டம், ஆலங்குளம் வடக்கு ஒன்றியம், வீராணம் அரசு மேல்நிலைப் பள்ளியில் தமிழக அரசின் விலையில்லா மிதிவண்டி வழங்கும் நிகழ்ச்சியை தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் மற்றும் தென்காசி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.பழனிநாடர் ஆகியோர் தொடங்கி வைத்தனர் இந்நிகழ்ச்சியில் செயற்குழு உறுப்பினர் ஜேசுராஜன், ஒன்றிய செயலாளர் அன்பழகன், ஒன்றிய கவுன்சிலர்கள் சேக்மைதீன், முரளி ராஜா, பால்துரை, கிளை செயலாளர் பால சுப்பிரமணியன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் ரமேஷ், பொன் செல்வன் சாகுல்ஹமிது மருதப்ப பாண்டியன், அமானுல்லா, அன்சார்அலி, செல்லத்துரை, முகம்மது அலி, முத்தலிப்பு, படித்துறை மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# புதுக்கோட்டையில் அரசினர் தொழிற் பயிற்சி நிலையம், சிட்டி ரோட்டரி சங்கம், அரசினர் தொழிற்பயிற்சி நிலைய ரோட்ராக்ட் சங்கம் இணைந்து நடத்திய சமத்துவ பொங்கல் விழா



புதுக்கோட்டை : ஜன. 13, புதுக்கோட்டை அரசினர் தொழிற் பயிற்சி நிலையம், புதுக்கோட்டை சிட்டி ரோட்டரி சங்கம் மற்றும் அரசினர் தொழிற்பயிற்சி நிலைய ரோட்ராக்ட் சங்கம் இணைந்து நடத்திய சமத்துவ பொங்கல் விழா நேற்று அரசினர் தொழிற் பயிற்சி நிலைய வளாகத்தில் சிறப்பாக நடைபெற்றது.

நிகழ்விற்கு நிலைய முதல்வர் எம்.சுந்தரகணபதி தலைமை தாங்கினார். புதுக்கோட்டை சிட்டி ரோட்டரி சங்க தலைவர் அசோகன் வரவேற்றார். அதனை தொடர்ந்து, சிலம்பம், கோலம், கிராமிய பாடல், நடனம் மற்றும் பானை உடைத்தல் போட்டிகள் நடைபெற்றது. இருபால் பயிற்சியாளர்கள் மற்றும் பயிற்றுநர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். சிறப்பு விருந்தினராக ரோட்டரி மாவட்ட பப்ளிக் இமேஜ் சேர்மன் ஏ.கே.எஸ். டாக்டர் சீனிவாசன் வருகை தந்து போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பாராட்டு பரிசுகள் வழங்கி சிறப்பு செய்தார்கள்.

புதுக்கோட்டை சிட்டி ரோட்டரி சங்க செயலாளர் முத்தன் அரசகுமார், பொருளாளர் சங்கர் மற்றும் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு சங்கத் தலைவர் மாருதி. கண.மோகன்ராஜ், நிலைய பயிற்சி அலுவலர்கள் ராமராஜ், மனோகரன் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். நிகழ்ச்சியை நிலைய விழா குழு தலைவர் ரமேஷ் மற்றும் ஆனந்த் பாலாஜி ஒருங்கிணைத்தார்கள் நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர் ஜோதிமணி நன்றி கூறினார்.

# மதர் தெரசா கல்வி நிறுவனங்களில் பொங்கல் பண்டிகை கொண்டாட்டம்




இலுப்பூர் : ஜன. 13, புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர், மேட்டுசாலையில் அமைந்துள்ள மதர் தெரசா கல்வி நிறுவனங்களில் நேற்று பொங்கல் பண்டிகை மிக சிறப்பாக கொண்டாடப்பட்டது.

நிறுவனர் சின்னதம்பி தலைமை வகித்தார்கள். தாளாளர் உதயகுமார் முன்னிலை வகித்தார்கள். மேனாள் சுகாதாரத்துறை அமைச்சரும் விராலிமலை சட்டமன்ற உறுப்பினர் சி.விஜயபாஸ்கர் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு விழாவினை சிறப்பித்தார்கள்.

இலுப்பூரை சார்ந்த முக்கிய பிரமுகர்களும் கலந்துகொண்டனர். கோலப்போட்டி, பொங்கல் போட்டி என்று சுமார் 50க்கும் மேற்பட்ட பாரம்பரிய விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட்டது. மாணவ, மாணவிகளும், பேராசிரியர்களும் ஆர்வத்துடன் கலந்துகொண்டனர். இவ்விழாவினை உடற்கல்வி இயக்குனர் மகேந்திரன் மற்றும் நிறுவனத்தின் மக்கள் தொடர்பு அதிகாரி நாகப்பன் ஒருங்கிணைத்து நடத்தினார்கள்.

# கிருஷ்ணாபுரத்தில் திமுக நகர கழக சார்பில் ஊழியர் கூட்டம்



கடையநல்லூர் : ஜன. 13, தென்காசி மாவட்டம், கடையநல்லூரில் திமுக நகர செயலாளர் எஸ்.அப்பாஸ் தலைமையில் ரோட்டரி கிளப் சங்கத்தில் ஊழியர் கூட்டம் நடைபெற்றது.

தமிழர் திருநாளாம் தைத்திருநாளில் நமது திமுக கொடியை நகரப் பகுதிகளில் தென்காசி மாவட்ட செயலாளர் வே.ஜெயபாலன் அவர்களின் வழிகாட்டுதலின்படி ஏற்றிடவேண்டும் என்றும், உதயசூரியன் படிப்பகம் அவுச்சாரி ரஹ்மதுல்லாஹ், முகமது அப்பா, விஜயன், முருகையா, கனி நைனா முகமது, முகமது இல்லியான், காந்தி சுப்பையா ஆகியோரின் மறைவிற்கு அஞ்சலி செலுத்தியும், வரும் 21 ஆம் தேதி சேலத்தில் நடைபெறும் இரண்டாம் இளைஞரணி மாநில மாநாட்டில் இளைஞர்களும், கழகத் தோழர்களும் கலந்து கொள்வதெனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பொதுமக்கள் அரசின் நலத்திட்டங்களை பெறுவதற்கான படிவத்தை விரைவாக பூர்த்தி செய்து நகரக் கழகத்தில் ஒப்படைக்கவேண்டும் என முடிவு செய்யப்பட்டது. பிஎல்ஏ 2, பிஎல்ஏசி தலைமைக் கழகத்தின் கட்டளையை ஏற்று நிறைவேற்றி தந்திடவும், வரும் நாடாளுமன்றத் தேர்தலில் கழகத் தலைவர் அறிவிக்கும் வேட்பாளரை அமோக வெற்றி பெற வைக்க வேண்டும், தேர்தல் வாக்குறுதிகளை 90% நிறைவேற்றியும், மகளிர் உரிமைத்தொகை, பொங்கல் சிறப்பு தொகுப்பு, ரூ1000, அனைத்து ரேஷன் கார்டுகளுக்கும் வழங்கியும், மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நிவாரணத் தொகை வழங்கிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி தெரிவித்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் காளிமுத்து, மூர்த்தி, சுல்தான், அலாவுதீன், முகமது அப்பாஸ், முகமது பைசல், அப்துல் காதர், செய்யது அலி, அப்துல் வஹாப், ஷேக் முகமது, அப்துல் ஜப்பார், எஸ்.எம்.ஏ.மஜித், சகாபுதீன், அபூபக்கர், பி.எஸ்.மணி, ஐயப்பன், முபாரக் பாஷா, எஸ்.ஏ. சேகனா, சிந்தா மதர், மைதீன், முகமது அலி, கே.கே.முகமது மைதீன், அக்பர் ஏ.சாகுல் ஹமீது, சம்சுதீன், எ.எ.முகைதீன், அப்துல் ரசாக், அமுதம் இஸ்மாயில், ஆர். லட்சுமணன், எம்.முஸ்தபா, எஸ்.பொன்னுச்சாமி, எம். வசந்த்குமார், மகாராஜா தியேட்டர் உரிமையாளர் சலாம் ஆகியோர் ஊழியர் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

# இராஜபாளையம் அருகேயுள்ள மவுண்ட் சீயோன் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி மாணவ, மாணவிகள் பொங்கல் பண்டிகை கொண்டாட்டம்



இராஜபாளையம் : ஜன. 13, இராஜபாளையம் அருகேயுள்ள மவுண்ட் சீயோன் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி மாணவர்கள் பட்டுப்பாவாடை, வேட்டி சட்டை அணிந்து வந்து பொங்கல் பண்டிகையை நேற்று உற்சாகமாக கொண்டாடினார்கள்.

விவசாயிகளுக்கும் கால்நடைகளுக்கும் நன்றி தெரிவிக்கும் நாளாக பொங்கல் பண்டிகை ஆண்டுதோறும் கொண்டாடப்படுகிறது. அதே போல் இந்த ஆண்டு வருகிற 15 ந்தேதி (திங்கட்கிழமை) பொங்கல் பண்டிகையும்,16 ந்தேதி (செவ்வாய்க்கிழமை) மாட்டுப் பொங்கலும் உற்சாகமாக கொண்டாடப்பட இருக்கிறது. பொங்கலுக்கு இன்னும் 2 நாட்களே உள்ள நிலையில் மவுண்ட் சீயோன் பள்ளி மாணவ, மாணவிகளிடையே சமத்துவம், சகோதரத்துவத்தை ஏற்படுத்தும் நோக்கில் சமத்துவப் பொங்கல் விழா பள்ளி ஆசிரியர்களால் கொண்டாடப்பட்டது.

விழாவில் மாணவ, மாணவியர்கள் அனைவரும் பட்டுப்பாவாடை, வேட்டி சட்டை அணிந்து வந்திருந்தனர். பின்னர் ஆசிரியர்கள் பொங்கல் வைக்க மாணவர்கள் குலவை சத்தமிட்டனர். பின்னர் கரும்புகளை முக்கோண வடிவில் அமைத்து அதன் நடுவே பொங்கல் பானையை வைத்து கும்மியடித்து மகிழ்ந்தனர். பின்னர் மாணவர்கள் அனைவருக்கும் சர்க்கரைப் பொங்கல், கரும்பு வழங்கப்பட்டது. நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை பள்ளித்தலைமையாசிரியை கல்யாணசுந்தரி, ஆசிரியர்கள் அயோத்திராமன், பாலசுப்பிரமணியன், மாரியம்மாள், முனியசாமி ஆகியோர் செய்திருந்தனர்.

# தென்காசி நூலகத்தில் சமத்துவ பொங்கல் விழா



*தென்காசி : ஜன. 13, தென்காசி மாவட்ட மைய நூலகம் மற்றும் தென்காசி மாவட்ட அரசு அலுவலர் ஒன்றியம் இணைந்து நடத்திய சமத்துவ பொங்கல் விழா தென்காசி மாவட்ட மைய நூலக வளாகத்தில் நடைபெற்றது.*

*மாவட்ட அரசு அலுவலர் ஒன்றிய தலைவர் சுப்பிரமணியன் தலைமை வகித்தார். இந்தியன் வங்கி மேலாளர் வினோத்குமார் முன்னிலை வகித்தார். இவ்விழாவில் அலுவலக கண்காணிப்பாளர் திருமலைக் குமாரசாமி, வட்டார கல்வி அலுவலர் இளமுருகன், மாவட்ட துணைச் செயலாளர் வெற்றிவேலன், உதவி மேலாளர் ஓய்வூதியர் சங்க மாவட்ட தலைவர் முகம்மது சலீம் மீரான், கவிஞர் குழந்தை ஜேசு, நூலகர்கள் பிரமநாயகம், சுந்தர், ஜூலியா, ராஜ செல்வி, நிஷா கிறிஸ்டிபாய், உதவியாளர் ஜேசுராணி, வாசகர் வட்ட நிர்வாகிகள் முருகேசன், ராஜி, கீழப்புலியூர் செல்வி, இலஞ்சி செந்தில்வேல், சுந்தரகுமாரி மற்றும் வாசகர்கள் பொது மக்கள் போட்டி தேர்வுக்கு பயின்று வரும் மாணவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். முடிவில் நூலகர் பிரமநாயகம் அனைவருக்கும் நன்றி கூறினார்.*

# புதுக்கோட்டையில் அறம் லயன்ஸ் சங்கத்தினர் பார்வையற்றோருடன் பொங்கல் கொண்டாட்டம்




*புதுக்கோட்டை : ஜன. 13, புதுக்கோட்டை அறம் லயன்ஸ் சங்கத்தினர் நகர்மன்ற வளாகத்தில் கண் பார்வையற்றோருடன் பொங்கல் வைத்து பொங்கல் விழா கொண்டாடி மகிழ்ந்தனர்.*

*விழாவிற்கு அறம் லயன்ஸ் தலைவர் அரவிந்த் தலைமை தாங்கினார், செயலாளர் பிரபு அனனைவரையும் வரவேற்றார். புதுக்கோட்டை கோட்டாட்சியர் முனைவர் முருகேசன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பார்வையற்றோருடன் பொங்கல் வைத்து கொண்டாடி வேஷ்டி, சேலை, உணவுகள் வழங்கினார். நிகழ்வில் திமுக நகர செயலாளர் ஆ.செந்தில் மற்றும் அறம் லயன்ஸ் சங்கத்தின் நிர்வாகிகள் சேகர், சக்திவேல், பாண்டிவேல், பக்தவச்சலம், முத்துக்குமார், ஜெயசங்கர், பாரி, சத்தியமூர்த்தி, ரமேஷ், டிஜிட்டல் சரவணன், கார்த்திகேயன், முஹமது அபுபக்கர், பார்வையற்றோர் சங்க நல நிர்வாகிகள் கலந்துகொண்டனர். ஏற்பாடுகளை அறம் லயன்ஸ் தலைவர் அரவிந்த் தலைமையில் செய்தனர். முடிவில் சத்தியமூர்த்தி நன்றி கூறினார்.*

# “சாட்சிகளை கலைக்க வாய்ப்பு” – பெரியார் பல்கலை துணைவேந்தர் ஜாமீன் வழக்கு : ஜன.19–ல் விசாரணை



சென்னை : ஜன. 13, சாட்சிகளை கலைக்க வாய்ப்புள்ளதால் சேலம் பெரியார் பல்கலைக்கழக துணைவேந்தருக்கு வழங்கப்பட்ட இடைக்கால ஜாமீனை ரத்து செய்யக்கோரிய வழக்கை உடனடியாக விசாரிக்க வேண்டும் என்று சென்னை உயர் நீதிமன்றத்தில் முறையிடப்பட்டது. இதை ஏற்று, வரும் 19-ம் தேதி விசாரணைக்கு எடுத்துக் கொள்வதாக நீதிபதி நிர்மல் குமார் அறிவித்துள்ளார்.

சேலம் பெரியார் பல்கலைக்கழக துணைவேந்தர் ஜெகநாதன் விதிகளை மீறி அரசு அனுமதி பெறாமல், பல்கலைகழகத்தின் பல்வேறு பணிகளை மேற்கொள்வதற்காக சொந்தமாக பெரியார் பல்கலைகழக தொழில்நுட்ப தொழில்முனைவோர் மற்றும் ஆராய்ச்சி பவுண்டேசன் என்ற அமைப்பை தொடங்கி, அரசு நிதியை பயன்படுத்தியதுடன் பல்கலைக்கழக அதிகாரிகளைக் கொண்டே அந்த நிறுவனத்தை செயல்படச் செய்ததாக பல்கலைகழகத்தின் ஊழியர் சங்கத்தினர் காவல்துறையில் புகார் அளித்திருந்தனர். அதேபோல சாதிப்பெயரை குறிப்பிட்டு திட்டியதாக கிருஷ்ணவேணி, சக்திவேல் ஆகியோரும் துணைவேந்தருக்குஎதிராக புகார் அளித்திருந்தனர்.

இந்த புகார்களின் அடிப்படையில், இந்திய தண்டனைச் சட்டம், வன்கொடுமை தடுப்புச் சட்டப் பிரிவுகளின் கீழ் கருப்பூர் காவல் நிலையத்தினர், வழக்குப்பதிவு செய்து, துணைவேந்தர் ஜெகநாதனை கைது செய்தனர். சேலம் மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட அவரை நீதிமன்ற காவலில் வைக்க உத்தரவிட மறுத்த மாஜிஸ்திரேட் நிபந்தனை ஜாமீன் வழங்கி உத்தரவிட்டார். இந்த இடைக்கால ஜாமீனை ரத்து செய்யக் கோரி, சேலம் கூடுதல் ஆணையர் தரப்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

மனுவை விசாரித்த உயர் நீதிமன்றம், “தீவிரமான இந்த வழக்கில் தனிநபர் சுதந்திரமும் சம்பந்தப்பட்டுள்ளதால் துணைவேந்தர் தரப்பு வாதங்களையோ, பாதிக்கப்பட்ட புகார்தாரர் தரப்பு வாதங்களையோ கேட்காமல் இந்த மனு மீது உத்தரவு பிறப்பிப்பது முறையாக இருக்காது” எனக் கூறி ஜனவரி 12-ம் தேதிக்குள் பதிலளிக்கும்படி துணைவேந்தர் தரப்புக்கு உத்தரவிட்டது.

மேலும், ஜாமீன் வழங்கியது தொடர்பாக விரிவான அறிக்கை தாக்கல் செய்யும்படி மாஜிஸ்திரேட்டுக்கு உத்தரவிட்ட நீதிபதி, விசாரணையை ஜனவரி 12-ம் தேதிக்கு தள்ளிவைத்திருந்தது. இந்நிலையில், இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு பட்டியலிடப்படாததால், காவல் துறை தரப்பில் நீதிபதி நிர்மல்குமார் முன் முறையீடு செய்யப்பட்டது. சாட்சிகளை கலைக்க வாய்ப்புள்ளதால், ஜாமீனை ரத்து செய்யக் கோரிய மனுவை உடனடியாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என காவல் துறை தரப்பில் கேட்டுக் கொள்ளப்பட்டது. இதையடுத்து, இந்த மனுவை ஜனவரி 19-ம் தேதி விசாரணைக்கு எடுத்து கொள்வதாக நீதிபதி தெரிவித்தார்.

### சீர்காழியில் கலைஞர் நூற்றாண்டு விழா சிறப்பு பட்டா வழங்கும் முகாம்

# 538 பயனாளிகளுக்கு ஆட்சியர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் இலவச வீட்டு மனை பட்டாக்களை வழங்கினர்





சீர்காழி , ஜன.13–

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி தனியார் திருமண மண்டபத்தில் கலைஞர் நூற்றாண்டு விழா சிறப்பு பட்டா வழங்கும் முகாம் நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் மகாபாரதி தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பூம்புகார், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர்கள் நிவேதா முருகன், பன்னீர்செல்வம் கலந்து கொண்டணர்.

சீர்காழி மற்றும் தரங்கம்பாடி வட்டத்திற்கு உட்பட்ட 538 பயனாளிகளுக்கு ரூ. 2 கோடியே 52 லட்சத்து 50 ஆயிரம் மதிப்பில் இலவச வீட்டு மனை பட்டாக்களை மாவட்ட ஆட்சியர் மகாபாரதி மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் வழங்கினர். இதன் மூலம் சீர்காழி வட்டத்திற்கு உட்பட்ட வானகிரி சேர்ந்த 238, செம்மங்குடி 21, நாங்கூர் 63, ஆரப்பள்ளம் 152, கோபால சமுத்திரம் 11, எடக்குடி வடபாதி 3, வேட்டங்குடி 10, தரங்கம்பாடி வட்டம் 40 பேர் என மொத்தம் 538 பேர் பலன் அடைந்தனர்.

நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் மணிமேகலை, சமூக நலத்துறை தனித்துணை ஆட்சியர் கண்மணி, சீர்காழி வட்டாட்சியர் இளங்கோவன், தரங்கம்பாடி வட்டாட்சியர் சரவணன் மற்றும் வருவாய்த்துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



▶ செங்கல்பட்டு மாவட்டம் நந்திவரம் கூடுவாஞ்சேரியில் உள்ள அரசினர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் சுமார் 1300 மாணவர்கள் படித்து வருகின்றனர் பள்ளி வளாகத்தில் சமத்துவ பொங்கல் விழாவும் போகி பண்டிகையை முன்னிட்டு அதிகப்படியான புகையை குறைப்பதற்காக புகையில்லா போகி என்ற விழிப்புணர்வு பேரணியும் நடத்தப்பட்டது. மேலும் பேரணியை பள்ளியின் தாவரவியல் ஆசிரியர் குமார் சுற்றுச்சூழல் மன்ற ஒருங்கிணைப்பாளர் ஏற்பாடு செய்திருந்தார். மேலும் பேரணியை நந்திவரம் கூடுவாஞ்சேரி நகராட்சியின் துணைத் தலைவர் லோகநாதன் துவக்கி வைத்தார் . இந்த பேரணிக்கு பள்ளியின் தலைமை ஆசிரியர் பிரபாகர் தலைமை தாங்கினார். நிகழ்வில் பள்ளியின் மேலாண்மை குழு உறுப்பினர்கள், பள்ளியின் பசுமை படை ஒருங்கிணைப்பாளர் செல்வி, பள்ளியின் நாட்டு நலப்பணித்திட்ட ஒருங்கிணைப்பாளர் சரவணன், மற்றும் ஆசிரியர்கள் மாணவர்கள் அனைவரும் கலந்து கொண்டனர். பேரணி நெல்லிக்குப்பம் சாலை வழியாக சென்று பொது மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி மீண்டும் பள்ளி வளாகம் வந்து சேர்ந்தது. மேலும் பள்ளியில் உள்ள அனைத்து மாணவர்களுக்கும் சர்க்கரை பொங்கல் நாட்டு நல பணித்திட்ட அலுவலர் தயாளன் வழங்கினார்.

### பெரியபாளையத்தில் 12 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி

# தமிழ்நாடு தொடக்கக்கல்வி ஆசிரியர் இயக்கங்களின் கூட்டு நடவடிக்கைக் குழு சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது



ஊத்துக்கோட்டை, ஜன13–

தமிழ்நாடு தொடக்ககக்கல்வி ஆசிரியர் இயக்கங்களின் கூட்டு நடவடிக்கைக் குழு "டிட்டோ-ஜாக்" சார்பில் மாநிலம் தழுவிய வட்டார தலைநகரங்களில் வட்டாரக்கல்வி அலுவலகங்கள் முன்பு 12 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

அப்போது சி.பி.எஸ் திட்டத்தைஒழித்துபழைய ஓய்வூதிய திட்டமான ஜி.பி.எஃப் திட்டத்தை மீண்டும் அமுல்படுத்து. இடைநிலை ஆசிரியர்களின் ஊதிய முரண்பாடினை நீக்கிடு. பறிக்கப்பட்ட சரண்விடுப்பை மீட்டிடு. ஊக்கஊதியம் மீண்டும் வழங்கிடு. தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் காலியாக உள்ள ஆசிரியப் பணியிடங்களை உடனே நிரப்பிடு. கொத்தடிமைகளாக பணியாற்றிடும் பகுதி நேர ஆசிரியர்களை பணி நிரந்தரம் செய்து காலமுறை ஊதியம் வழங்கிடு. இ.எம்.ஐ.எஸ் பணியில் இருந்து விடுவித்து ஆசிரியர் பணி செய்திடு.

ஆசிரியர்களுக்கு பணி பாதுகாப்பு சட்டத்தை இயற்றிடு. தமிழக முதல்வரே தேர்தலில் கொடுத்தவாக்குறுதிகளை உடனடியாக நிறைவேற்றிடு. புதிதாக கொண்டு வந்துள்ள அரசாணை 243-யை உடனே நீக்கி பழைய நடைமுறையான வட்டார அளவில் முன்பு இருந்ததை போல் முன்னுரிமை அடிப்படையில் மீண்டும் தொடர்ந்திடு. என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி கண்டன கோஷங்களை எழுப்பினர்.

இந்த ஆர்ப்பாட்டத்துக்கு தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி எல்லாபுரம் வட்டார தலைவர் செல்வம், தமிழக ஆரம்ப பள்ளி ஆசிரியர் சங்க எல்லாபுரம் வட்டார தலைவர் கிருஷ்ணவேணி ஆகியோர் தலைமை தாங்கினர். தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் கூட்டணியின் முன்னாள் மாநில பொருளாளர் கதிரவன் முன்னிலை வகித்தார். தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணியின் திருவள்ளூர் மாவட்ட செயலாளர் ராஜாஜி, எல்லாபுரம் வட்டார பொருளாளர் ஆனந்தன் ஆகியோர் கலந்து கொண்டு கோரிக்கைகளை வலியுறுத்தி சிறப்புரையாற்றிபேசினர்.

கோரிக்கைகள் நிறைவேற அடுத்த கட்டமாக மாவட்ட தலைநகரமான திருவள்ளூரில் 27-ம் தேதி நடைபெறும் உண்ணாவிரதப் போராட்டத்தில்திரளாக கலந்துகொள்ளவேண்டும் என்று கூறினர். முடிவில், தமிழ்நாடு ஆரம்ப பள்ளி ஆசிரியர் சங்க வட்டார பொருளாளர் இளங்கோ நன்றி கூறினார்.




▶ தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் விழா சென்னை பிரஸ் கிளப் சார்பில் நேற்று சென்னை நந்தனத்தில் உள்ள ஆந்திரா சேம்பர் ஆப் காமர்ஸ் உள் அரங்கத்தில் நடைபெற்றது. இந்த விழாவில் புதுக்கோட்டை, சென்னை பதிப்பு புதுகை வரலாறு நாளிதழ் 2024 ஆம் ஆண்டு காலண்டரை சென்னை பிரஸ் கிளப் பொதுச் செயலாளர் ச.விமலேஷ்வரன் சென்னை பிரஸ் கிளப் தலைவரும் மூத்த பத்திரிகையாளருமான அ.செல்வராஜ் ஆகியோர் வெளியிட்டனர். தி இந்து நாளிதழின் முன்னாள் தொழிற்சங்க தலைவரும், மூத்த மற்றும் முன்னணி பத்திரிகையாளருமான .இ.கோபால் , ஊடகவியலாளர்கள் நலச்சங்க பொதுச் செயலாளரும், மூத்த ஒளிப்பதிவாளருமான பெ.வஜ்ஜிரவேல் சென்னை பிரஸ் கிளப் கௌரவ ஆலோசகரும், மூத்த பத்திரிகையாளருமான புகாரி செரீப் மற்றும் துணைத் தலைவர் ந.செல்வராஜ் , புதுகை வரலாறு சென்னை பதிப்பின் தலைமை செய்தி ஆசிரியர் சு காதர் உசேன் ஆகியோர் உடன் உள்ளனர்.



▶ புதுச்சேரி குடிசை மாற்று வாரியம் காரைக்கால் மாவட்டம் நெடுங்காடு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சந்திர பிரியங்கா புதுச்சேரி குடிசை மாற்று வாரியத்தின் மூலம் செயல்படுத்தப்படும் பிரதம மந்திரி வீடுகட்டும் திட்டத்தின் கீழ் நெடுங்காடு தொகுதியைச் சேர்ந்த 35 பயனாளிகளுக்கு பணி ஆணையை நேற்று வழங்கினார்கள். இந்நிகழ்வில் புதுச்சேரி குடிசை மாற்று வாரிய ஊழியர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர். முதல் தவணையான ரூ.1,20,000/- வீதம் பயனாளிகளின் வங்கிக் கணக்கில் செலுத்தப்படும்.

# சின்னப்பள்ளத்தூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் பொங்கல் திருவிழா கொண்டாடப்பட்டது





பென்னாகரம், ஜன.13–

பென்னாகரத்தை அடுத்துள்ள செங்கனூர் ஊராட்சிக்குட்பட்ட சின்னப்பள்ளத்தூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் சிலம்பப் பயிற்சி, விவேகானந்தர் பிறந்த தினம் பொங்கல் திருவிழா கொண்டாடப்பட்டது.

பெண் குழந்தைகள் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கத்துடன் பள்ளிக்கல்வித்துறை தற்காப்பு பயிற்சியை மாணவிகளுக்கு வழங்கி வருகிறது. ஆறு முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் பெண் குழந்தைகளுக்கு சிலம்பம் பயிற்சியை சிலம்ப பயிற்சியாளர் தமிழர் தற்காப்பு பயிற்சி பள்ளி ஆசிரியர் சண்முகம் பயிற்சி அளித்து வருகிறார்.

மாணவிகள் சிறப்பான முறையில் தற்காப்பு பயிற்சியை கற்று தேர்ச்சி அடைந்து வருகிறார்கள். சுவாமி விவேகானந்தரின் பிறந்த தினமான ஜனவரி 12 இளைஞர்கள் எழுச்சி தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

பள்ளி மாணவர்களுக்கு சுவாமி விவேகானந்தரின் சிந்தனைகள் கருத்துக்கள் எடுத்துக் கூறப்பட்டது. விவேகானந்தரின் நற்கருத்துகளை வாழ்க்கையில் கடைபிடித்து மேன்மையடைய வேண்டுமென வலியுறுத்தப்பட்டது.

மேலும் பொங்கல் திருவிழாவை முன்னிட்டு தமிழர் திருவிழாவான பொங்கல் திருவிழாவில் சிறப்புகள் மற்றும் பொங்கல் விழாவில் நோக்கம் பற்றி மாணவர்களுக்கு விளக்கப்பட்டது. போகிப் பண்டிகையின் போது சுற்றுச்சூழலை பாதிக்கும் வகையில் பொருள்கள் எரிப்பதை தவிர்க்க வேண்டும் என மாணவர்களையும், பெற்றோர்களையும் பொது மக்களையும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

பிறகு பள்ளியில் பொங்கல் வைத்து வழிபாடு செய்யப்பட்டது. பொங்கல் திருநாளில் உழவர்களுக்கும் கால்நடைகளுக்கும் நன்றி தெரிவிக்கும் விதமாக மாணவர்களிடையே பொங்கல் விழா சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டது. இந்நிகழ்விற்கான ஏற்பாடுகளை பள்ளியின் தலைமை ஆசிரியர் மா.பழனி செய்திருந்தார். இவ்விழாவில் ஆசிரியர்கள் வளர்மதி, பழனிச்செல்வி, கல்பனா, திலகவதி, ரேக்கா, சத்துணவு அமைப்பாளர் அம்பிகா, சமையலர்கள், மாணவர்கள் ஊர் பொதுமக்கள் கலந்துக் கொண்டனர்.




▶ சேலம் மாவட்டம் அழகாபுரம் கிளை நூலகம் சார்பாக நேற்று சமத்துவ பொங்கல் வைக்கப்பட்டது .இதில் மகாகவி பாரதியாரின் கொள்ளுப்பேத்தி உமா பாரதி, சர்மிளா சரவணன் தலைமையில் பொங்கல் இடப்பட்டது. இதை நூலகர் சம்பத் ஏற்பாடு செய்தார். மாணவர்களும் அங்குள்ளவர்களும் கலந்து கொண்டு பொங்கலிட்டு மகிழ்ந்தனர்

# சீர்காழி கல்லூரியில் தமிழச்சி சமத்துவ பொங்கல் விழா கொண்டாட்டம்



சீர்காழி , ஜன.13–

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியில் விவேகானந்தா மகளிர் கலை அறிவியல் கல்லூரி இயங்கி வருகிறது. இங்கு பாரம்பரிய தமிழச்சி பொங்கல் விழா கொண்டாடப்பட்டது.

இதற்காக கல்லூரி மாணவிகள் தங்கள் வீடுகளிலிருந்து அரிசி, வெல்லம், முந்திரி, ஏலக்காய், பால் உள்ளிட்ட பொருட்களைக் கொண்டு வந்திருந்தனர். தொடர்ந்து மாணவிகள் கொண்டு வந்திருந்த பொருட்களை விளையாட்டு மைதானத்தின் நடுவே சுற்றிலும் கரும்புகள் கட்டப்பட்டு அடுப்புகள் வைத்து வண்ணம் தீட்டிய பானைகளில் பொங்கல் வைத்து, கல்லூரி ஆசிரியர்கள் பொங்கல் வைத்தனர்.

தொடர்ந்து பொங்கல் பொங்கி வரும் பொழுது நூற்றுக்கணக்கான மாணவிகள் ஒரே சமயத்தில் பொங்கலோ பொங்கல் என்று உற்சாக குரல் எழுப்பி பொங்கல் பண்டிகையை கொண்டாடினர். மேலும் கல்லூரி மாணவிகள் தமிழர்களின் பாரம்பரிய உடையான புடவை கட்டிக்கொண்டு சிலம்பம் சுற்றியது அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது. நிகழ்ச்சியில் சீர்காழி கோட்டாட்சியர் அர்ச்சனா, விவேகானந்தா கல்லூரி இயக்குனர் ராதாகிருஷ்ணன், அனித ராதாகிருஷ்ணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# எல்லாபுரம் வட்டார வளர்ச்சி அலுவலக வளாகத்தில் சமத்துவ பொங்கல் விழா





ஊத்துக்கோட்டை,ஜன13–

தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை புகையின்றி கொண்டாட வேண்டும். அனைத்து மதத்தினரும் கலந்து கொள்ளுமாறு சமத்துவத்துடன் சமத்துவ பொங்கல் கொண்டாட வேண்டும் என தமிழக அரசு அறிவுறுத்தியுள்ளது.

மேலும், தமிழக மக்கள் பொங்கல் விழாவை கொண்டாட குடும்ப அட்டைதாரர்களுக்கு ரொக்க பணம் ரூ.1,000,அரிசி,சர்க்கரை உள்ளிட்ட பொருட்களை அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் வழங்கியது. மேலும், அரசு அலுவலகங்களான வட்டார வளர்ச்சி அலுவலகம். பேரூராட்சி மன்ற அலுவலக வளாகம் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் இந்த பொங்கலை சமத்துவ பொங்கலாக கொண்டாடி வருகின்றனர்.

இந்நிலையில், திருவள்ளூர் மாவட்டம், பெரியபாளையத்தில் உள்ள எல்லாபுரம் வட்டார வளர்ச்சி அலுவலக வளாகத்தில் சமத்துவ பொங்கல் விழா கொண்டாடப்பட்டது. இதை முன்னிட்டு வட்டார வளர்ச்சி அலுவலக வளாகத்தில் பல வண்ணங்களில் கோலம் போட்டிருந்தனர்.

மேலும், மாஇலை தோரணங்கள் அலுவலகம் முழுவதும் கட்டப்பட்டிருந்தது. இதன் பின்னர், வட்டார வளர்ச்சி அலுவலக நுழைவாயிலில் முழு கரும்பை அலங்காரமாக கட்டி நிறுத்தி வைத்தனர். இதன் அருகே அலங்கரிக்கப்பட்ட பானையில் பொங்கல் வைத்தனர். பொங்கல் பொங்கியபோது அங்கிருந்த அனைவரும் பொங்கலோ பொங்கல் என்று கோஷமிட்டனர். நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், எல்லாபுரம் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பொற்செல்வி (வட்டார ஊராட்சிகள்), சத்தியமூர்த்தி (கிராம ஊராட்சிகள்) மற்றும் அலுவலகத்தில் பணியாற்றும் பணியாளர்கள், ஊழியர்கள், 53 ஊராட்சிகளில் பணியாற்றும் ஊராட்சி செயலர்கள் உள்ளிட்டோர் பாரம்பரிய உடை அணிந்து இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

# சென்னை பிரஸ் கிளப் உறுப்பினர்களுக்கு பொங்கல் தொகுப்பை பரிசாக வழங்கும் விழா தலைவர் செல்வராஜ்,செயலாளர் விமலேஸ்வரன் பங்கேற்பு



சென்னை, ஜன,13

தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் நன்னாளை முன்னிட்டு சென்னை பிரஸ் கிளப் உறுப்பினர்களுக்கு பொங்கல் தொகுப்பை பரிசாக வழங்கும் விழாவானது நேற்று வெள்ளிக்கிழமை காலை சுமார் 11 மணி அளவில் சென்னை நந்தனத்தில் உள்ள ஆந்திரா சேம்பர் ஆப் காமர்ஸ் உள் அரங்கத்தில் நடைபெற்றது.

சென்னைபிரஸ்கிளப் பொதுச் செயலாளர் ச.விமலேஷ்வரன் வரவேற்புரையோடு துவங்கிய அவ்விழாவில், தி இந்து நாளிதழின் முன்னாள் தொழிற்சங்க தலைவரும், மூத்த மற்றும் முன்னணி பத்திரிகையாளருமான இ.கோபால் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு சென்னை, திருப்பதி, கோவை, திருப்பூர், திருச்சி என தமிழ்நாட்டின் பல மாவட்டங்களில் இருந்து வந்திருந்த சென்னை பிரஸ் கிளப் உறுப்பினர்கள் மற்றும் விழாவில் கலந்து கொண்ட சகபத்திரிகை அமைப்புகளின் தலைவர்கள் அனைவருக்கும் பொங்கல் சிறப்பு தொகுப்பு பரிசை வழங்கி கௌரவித்தார். அப்போது ஏற்புரை ஆற்றிய அவர் சென்னை பிரஸ் கிளப் கடந்து வந்த பாதைகள் குறித்தும், இனிவரும் காலங்களில் பத்திரிகையாளர்கள் அனைவரும் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகள் குறித்தும், கடந்த கால தன் அனுபவங்களை நிகழ்கால பத்திரிகையாளர்களுடன் பகிர்ந்து கொண்டார்.

விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட பத்திரிகையாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் நலச்சங்க பொதுச் செயலாளரும், மூத்த ஒளிப்பதிவாளருமான பெ.வஜ்ஜிரவேல் பேசும்போது மூத்த பத்திரிகையாளர்களுடன் ஒருங்கிணைந்து இளம் பத்திரிகையாளர்களின் எண்ணங்களுக்கு ஏற்ப சிறப்புடன் செயல்பட்டு வரும் சென்னை பிரஸ் கிளப் நிர்வாகிகள் மற்றும் விழாவில் கலந்து கொண்ட பத்திரிகையாளர்கள் அனைவருக்கும் வாழ்த்துக்களையும் ஆலோசனைகளையும் வழங்கினார். நிகழ்ச்சியின்போது பேசிய சென்னை பிரஸ் கிளப் கௌரவ ஆலோசகரும், மூத்த பத்திரிகையாளருமான புகாரி செரீப் பேசும்போது, கடந்த ஆண்டுகளில் சென்னை பிரஸ் கிளப்பின் செயல்பாடுகள் சிறப்புடன் திகழ்வதாகவும், தொடர்ந்து தொய்வில்லாமல் பணிகள் தொடர நிர்வாகிகள் அனைவரும் ஆற்ற வேண்டிய கடமைகள் குறித்தும் தனது கருத்துக்களை தெரிவித்து மகிழ்ந்தார்.

அரங்கு நிறைந்த கூட்டத்தோடு நடைபெற்ற அவ்விழாவில் சென்னை பிரஸ் கிளப் தலைவரும் மூத்த பத்திரிகையாளருமான அ.செல்வராஜ் மற்றும் துணைத் தலைவர் ந.செல்வராஜ் ஆகியோர் விழா சிறப்புரையாற்ற, துணை தலைவர் ராஜன் பாபு நன்றியுரை தெரிவித்தார். நிகழ்ச்சியின் இறுதியில் சென்னை பிரஸ் கிளப் தலைவர், பொதுச் செயலாளர் மற்றும் நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொண்ட 2024 ஆம் ஆண்டிற்கான முதல் நிர்வாகிகள் கூட்டமும் நடைபெற்றது.

# வெள்ள நிவாரணத்தை தமிழ்நாடு அரசு பார்த்துக் கொள்ளும் : உச்ச நீதிமன்றம் அதிரடி



புதுடில்லி : ஜன. 13, புயல், மழையால் பாதிக்கப்பட்டுள்ள தமிழ்நாட்டுக்கு ரூ.8,000 கோடி நிவாரணம் வழங்க மத்திய அரசுக்கு உத்தரவிடக்கோரி மதுரையை சேர்ந்த கே.கே. ரமேஷ் என்பவர் தாக்கல் செய்த மனுவை உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

தமிழ்நாட்டில் சமீபத்தில் வீசிய மிக்ஜாம் புயல் மற்றும் அதைத்தொடர்ந்து ஏற்பட்ட வெள்ளம் காரணமாக சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் பெரியளவில் பாதிப்பு ஏற்பட்டது. இதன் சுவடு மறையும் முன்பாக, அடுத்த சில தினங்களிலேயே தென்மாவட்டங்களில் ஏற்பட்ட வரலாறு காணாத கனமழையால் நெல்லை, தூத்துக்குடி, தென்காசி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டன.

இந்நிலையில் புயல் மற்றும் மழையால் தமிழ்நாடு பாதிக்கப்பட்டு உள்ளதை குறிப்பிட்டு ₹8,000 கோடி நிவாரணம் வழங்கவும், அதில் ₹3,000 கோடியை இடைக்கால நிவாரணமாக உடனடியாக வழங்க மத்திய அரசுக்கு உத்தரவிடக் கோரியும், மதுரையை சேர்ந்த கே.கே. ரமேஷ் என்பவர் சமீபத்தில் உச்சநீதிமன்றத்தில் வழக்கு ஒன்றை தாக்கல் செய்திருந்தார்.

இதை விசாரித்த உச்சநீதிமன்றம் கே.கே. ரமேஷ் தாக்கல் செய்த மனுவை தள்ளுபடி செய்து உத்தரவு பிறப்பித்துள்ளது. அந்த உத்தரவில், 'தமிழ்நாடு அரசுக்கு பிரச்சினை இருந்தால் அவர்கள் முறையிடுவார்கள். இது அரசின் நிர்வாகம் சம்மந்தப்பட்டது.

நீங்கள் அதைப்பற்றி கவலைப்பட வேண்டாம். புயல், மழை போன்ற விவகாரங்களை தமிழ்நாடு அரசு பார்த்துக்கொள்ளும். இதில் நீதிமன்றம் தலையிட முடியாது. இந்த மனுவை நாங்கள் விசாரிக்க விரும்பவில்லை' என நீதிபதிகள் கூறியுள்ளனர்.



தென்காசி மாவட்டம், புளியங்குடி, சிந்தாமணியில் தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் ஆணைப்படி, நகர்மன்ற உறுப்பினரும், நகர துணை செயலாளர் காந்திமதி அம்மாள் முன்னிலையில், நகர செயலாளரும், நகர் மன்ற துணைத் தலைவருமான எ.அந்தோணிசாமி, நகர்மன்ற தலைவி விஜயா சௌந்தரபாண்டியன் ஆகியோர் தலைமையில், 3-வது வார்டு பொதுமக்களுக்கு ரூ. 1000,1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சர்க்கரை, கரும்பு ஆகிய பொங்கல் தொகுப்பை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வழங்கினர். நிகழ்ச்சியில் மாவட்ட பிரதிநிதி சுரேஷ், நகர வர்த்தக அணி அமைப்பாளர் மைதீன், நகரசிறுபான்மை அணி அமைப்பாளர் சேக் மைதீன், இளைஞர் அணி முருகேஷ் கலந்துகொண்டு பொதுமக்களுக்கு பொங்கல் தொகுப்பை வழங்கி சிறப்பித்தனர்.

# சென்னை குன்றத்தூர் அருகே உள்ள தனியார் இரும்பு கழிவு பொருட்கள் தரம் பிரிக்கும் கிடங்கில் தீ விபத்து



குன்றத்தூர் : ஜன. 13, குன்றத்தூர் அருகே பழைய இரும்புக் கிடங்கில் சிலிண்டர் வெடித்து ஏற்பட்ட தீ விபத்தால் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

சென்னை குன்றத்தூருக்கு அருகே உள்ளது இரண்டாம் கட்டளை ஊராட்சி. இங்குள்ள ராகவேந்திரா நகரில் தனியாருக்குச் சொந்தமான திறந்தவெளி கிடங்கு ஒன்று இயங்கி வருகிறது. இங்கு பழைய இரும்பு, அலுமினியம் உட்பட பல்வேறு பொருட்கள் குவியலாகக் கொட்டப்பட்டுள்ளது.

இந்தப் பொருட்களோடு கியாஸ் சிலிண்டர்களும் இருந்ததாகத் தெரிகிறது. இந்நிலையில், நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு இந்தக் கிடங்கில் இருந்த கழிவுகள் திடீரென தீப்பற்றி எரிந்துள்ளது. இரும்புக் கழிவுகளுடன் பிளாஸ்டிக் உள்ளிட்ட பொருட்களும் இருந்ததால், தீ மளமளவெனப் பரவியுள்ளது.

இதன் காரணமாக, அங்கிருந்த சிலிண்டர்கள் பயங்கர சத்தத்துடன் வெடித்துச் சிதறியது. இதனால், அருகில் இருந்த வீடுகளில் இருந்தவர்கள் அதிர்ச்சியடைந்து வீடுகளை விட்டு வெளியே ஓடி வந்தனர். அப்போது, பழைய இரும்புக் கிடங்கில் தீ பற்றி எரிவதைப் பார்த்த மக்கள், உடனடியாக தீயணைப்புத் துறைக்குத் தகவல் தெரிவித்தனர்.

இதையடுத்து, பூந்தமல்லி தீயணைப்பு வீரர்கள் சென்று தீயை கட்டுப்படுத்த முயன்றனர்.

ஆனால், தீ கட்டுக்கடங்காததால், மதுரவாயல், தாம்பரம் உள்ளிட்ட பகுதியில் இருந்து மேலும் 3 தீயணைப்பு வரவழைகப்பட்டு தீயை அணைக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டன. தீயணைப்பு வீரர்கள் நீண்ட நேரம் போராடி தீயை அணைத்தனர். சிலிண்டர் வெடிப்பு ஏற்பட்டதால், பாதுகாப்பு கருதி அந்த பகுதியில் மின் தடை செய்யப்பட்டது. அத்துடன், குடோனை சுற்றியுள்ள வீடுகளில் வசிப்போர் வெளியேற்றப்பட்டனர். இதனால், அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

# புதுச்சேரி ஆளுநர் தமிழிசை தலைமையில் பாரம்பரிய முறையில் பொங்கல் விழா கொண்டாட்டம்



புதுச்சேரி : ஜன. 13, புதுச்சேரி துணைநிலை ஆளுநர் தமிழிசை தலைமையில் பாரம்பரிய முறையில் பொங்கல் விழா கொண்டாட்டம் நேற்று காலை நடைபெற்றது.

ஆளுநர் மாளிகை வளாகத்தில் நடைபெற்ற பொங்கல் நிகழ்ச்சியில் துணைநிலை ஆளுநர் தமிழிசை புது பானையில் பால் மற்றும் அரிசி இட்டு பொங்கல் நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார்.

பொங்கல் விழாவை ஒட்டி ஆளுநர் மாளிகை வளாகமே தோரணங்கள் மற்றும் கரும்புகளால் அலங்கரிக்கப்பட்டு இருந்தது. இதில் கலந்துகொண்ட ஏராளமான பெண்கள் புது பானையில் பொங்கல் வைத்து கொண்டாடினார்கள்.

தொடர்ந்து கிராமிய கலைஞர்களின் கலை நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் மானாட்டம், மயிலாட்டம், தப்பாட்டம் கரகாட்டம், பரதநாட்டியம், உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

ராஜ் நிவாஸில் நடைபெற்ற பொங்கல் நிகழ்ச்சியில் முதல்வர் ரங்கசாமி, பேரவைத்தலைவர் செல்வம், அமைச்சர்கள் நமச்சிவாயம், தேனீ. ஜெயக்குமார், லட்சுமி நாராயணன், தலைமை செயலர் ராஜீவ் வர்மா, சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள் அமைச்சர்கள். பொதுமக்கள் என அனைவரும் திரளாக கலந்து கொண்டனர்.

மற்றவர்களை ஆளுநர் பேச கூறியபோது அவர்கள் ஆளுநரை பேசக்கூறினர்.

அதையடுத்து ஆளுநர் தமிழிசை, "நான் பேசுவதைக் கேட்பதில் சந்தோசம். புதுச்சேரி வளர்ச்சிக்கு அனைவரும் பாடுபடுவோம். அனைத்தும் செய்கிறோம். அனைவரும் இணைந்து பணியாற்றுவோம். புதுச்சேரியை முன்னேற்றுவதில் வளர்ச்சி பொங்கலாக இருக்கும்." என்று குறிப்பிட்டார்.

அதைத்தொடர்ந்து செய்தியாளர்களிடம் துணைநிலை ஆளுநர் தமிழிசை கூறுகையில், "பொங்கல் நல்ல வாழ்க்கையை மகிழ்ச்சி, ஆரோக்கியத்தைத் தர வேண்டுகிறேன். கொரோனா காலங்களில் இதுபோல் கொண்டாட முடியவில்லை. எந்த நிகழ்வாக இருந்தாலும் ஓரிரு கிராமிய கலை நிகழ்வுகளை சேர்த்துக்கொள்ளவேண்டும். அது கிராமிய கலைஞர்களை ஊக்கப்படுத்தும் திருமணங்களிலும் அவர்களை அழைத்து நிகழ்ச்சியை நடத்தலாம். காதுக்கு கேட்காத சப்தத்தில் நிகழ்வை நடத்துவதை விட கிராமிய கலை நிகழ்வுகளை நடத்தலாம். மக்கள் வளர்ச்சி பாதை நோக்கி செல்ல வாழ்த்துக்கள்.

புதுச்சேரி அனைத்து விதத்திலும் வளர்ந்து வருகிறது. முழு பட்ஜெட் தாக்கல், அரசு பள்ளி குழந்தைகளுக்கு மருத்துவத்தில் 10 சத உள்ஒதுக்கீடு தந்துள்ளோம். கைத்தறி தரவில்லை, பாலியஸ்டர் தருவதாக பக்கத்து மாநிலங்களில் மக்கள் சொல்கிறார்கள். அதனால்தான் பயனாளிகள் வங்கி கணக்கில் பணத்தை செலுத்துகிறோம். மக்கள் தங்களுக்கு தேவையானதை வாங்கிக்கொள்வார்கள். டிஜிட்டல் தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதில் இந்தியா உலகளவில் முன்னிலையில் உள்ளது. காய்கறி விற்போர், மீன் விற்போர் என எளிய மக்களிடத்திலும் டிஜிட்டல் இந்தியா சென்றுள்ளது" என்று குறிப்பிட்டார். 'அமைச்சர் உதயநிதி துணை முதல்வராக போகிறாரே?' என்ற கேள்விக்கு பதிலளிக்காமல் இரு கைகளையும் கூப்பி வணக்கிவிட்டு புறப்பட்டு சென்றார்.

# கறம்பக்குடியில் 100 கிலோ புகையிலை பொருள் பறிமுதல்



கறம்பக்குடி : ஜன. 13, கறம்பக்குடியில் விற்பனைக்காக கொண்டு செல்லப்பட்ட 100 கிலோ புகையிலை பொருட்களை நேற்று போலீஸார் பறிமுதல் செய்தனர்.

புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி பகுதியில் தடைசெய்யப்பட்ட புகையிலைப் பொருள்களை சிலர் வாகனங்களில் கொண்டு சென்று விற்பனை செய்வதாக கிடைத்த தகவலைத் தொடர்ந்து, கறம்பக்குடி காவல் உதவி ஆய்வாளர் சாமிக்கண்ணு தலைமையிலான போலீஸார் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டனர். அப்போது, கறம்பக்குடி வடக்கு புதுத்தெருவைச் சேர்ந்த சாகுல் ஹமீது மகன் ரஹமத்துல்லா (49) என்பவர் தனது ஸ்கூட்டரில் ரூ.2.54 லட்சம் மதிப்பிலான 100 கிலோ புகையிலை பொருட்களை கொண்டு சென்றது தெரியவந்தது. தொடர்ந்து புகையிலைப் பொருள்களைப் பறிமுதல் செய்த போலீஸார் ரஹமத்துல்லாவிடம் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# பொன்முடி மற்றும் அவரது மனைவிக்கு சரணடைய விலக்கு : உச்ச நீதிமன்றத்தின் முக்கிய தீர்ப்பு



புதுடில்லி : ஜன. 13, சொத்து குவிப்பு வழக்கில் 3 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டு அவகாசம் அளிக்கப்பட்ட நிலையில், சரணடைவதில் இருந்து பொன்முடி மற்றும் அவரது மனைவிக்கு உச்சநீதிமன்றம் விலக்கு அளித்துள்ளது.

சொத்துக் குவிப்பு வழக்கில் முன்னாள் அமைச்சர் பொன்முடி மற்றும் அவரது மனைவி விசாலாட்சி ஆகியோருக்கு தலா 3 ஆண்டுகள் சிறை தண்டனை மற்றும் 50 லட்சம் ரூபாய் அபராதம் விதித்து சென்னை உயர் நீதிமன்றம் கடந்த டிசம்பர் 21ம் தேதி தீர்ப்பளித்தது. சென்னை உயர்நீதிமன்றம் அளித்த இந்த பரபரப்பான தீர்ப்பை எதிர்த்து, இருவரும் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்தனர்.

அந்த மனுவில் 'சென்னை உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்புக்கு இடைக்கால தடை விதிக்க வேண்டும். இடைப்பட்ட மனுவில் சிறையில் சரணடைவதில் இருந்து விலக்கு அளிக்க வேண்டும்' என பொன்முடி மற்றும் அவரது மனைவி விசாலாட்சி இருவரும் கோரிக்கை விடுத்து இருந்தனர். இந்த 2 மனுவும் உச்சநீதிமன்ற நீதிபதி சதீஷ் சந்திர சர்மா முன்பாக நேற்று விசாரணைக்கு வந்தது.

அப்போது வழக்கை விசாரித்த நீதிபதி சதீஷ் சந்திர சர்மா, 'இந்த வழக்கில் ஏன் இத்தனை மூத்த வழக்கறிஞர்கள் ஆஜராகியுள்ளீர்கள்?' என கேள்வி எழுப்பினார். பின்னர், இருவரும் சரண் அடைவதில் இருந்து விலக்கு அளித்து உத்தரவிட்டார். ஏற்கனவே பொன்முடி சரண் அடைய சென்னை உயர்நீதிமன்றம் 30 நாட்கள் அவகாசம் அளித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

# சென்னை உயர் நீதிமன்றத்தில் கோடநாடு வழக்கில் எடப்பாடி பழனிசாமியின் சாட்சியப் பதிவு தாக்கல்



சென்னை : ஜன. 13, கோடநாடு கொலை, கொள்ளை வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட கனகராஜின் சகோதரர் தனபாலுக்கு எதிராக தொடர்ந்தமான நஷ்டஈடு வழக்கில், அதிமுக பொது செயலாளர் எடப்பாடி பழனிசாமியின் சாட்சியப் பதிவை சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கறிஞர் ஆணையர் தாக்கல் செய்தார்.

கோடநாடு கொலை, கொள்ளை வழக்கில் தன்னை தொடர்புபடுத்தி வீடியோ வெளியிட்ட டெல்லியை சேர்ந்த பத்திரிகையாளர் மேத்யூ சாமுவேல், வழக்கில் குற்றம்சாட்டப்பட்டுள்ள சயான் மற்றும் வாளையார் மனோஜ் ஆகியோருக்கு எதிராக 2019ம் ஆண்டு தற்போது அதிமுகபொதுச் செயலாளராக உள்ள எடப்பாடி பழனிசாமி, ஒரு கோடியே 10 லட்ச ரூபாய் மான நஷ்ட ஈடு கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கில் சாட்சியங்களை பதிவு செய்வதற்காக வழக்கை மாஸ்டர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. இந்த நிலையில், உயர் நீதிமன்ற வளாகத்தில் உள்ள மாஸ்டர் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி சாட்சியம் அளிக்க இயலாது எனவும், தமது வீட்டில் சாட்சியத்தை பதிவு செய்ய வழக்கறிஞர் ஆணையரை நியமிக்க வேண்டுமெனவும் கோரி எட்பபாடி பழனிசாமி சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார்.


இந்த மனுவை ஏற்ற உயர் நீதிமன்றம், நேரில் ஆஜராகி சாட்சியம் அளிக்க எடப்பாடி பழனிசாமிக்கு விலக்கு அளித்தோடு, இந்த நடைமுறையை அவரது வீட்டில் மேற்கொள்வதற்காக வழக்கறிஞர் ஆணையராக எஸ்.கார்த்திகை பாலனை நியமித்தது.

இந்த வழக்கு நீதிபதி என். சதிஷ்குமார் முன்பு நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தபோது, நீதிமன்றம் நியமித்த வழக்கறிஞர் ஆணையர் எஸ். கார்த்திகைபாலன் ஆஜராகி, எடப்பாடி பழனிசாமியிடம் சாட்சியப்பதிவுநடைமுறை முடிந்து விட்டதாகவும், 6 ஆவணங்கள் குறிக்கப்பட்டுள்ளதாகவும் கூறி சாட்சியப்பதிவை தாக்கல் செய்தார். இதையடுத்து வழக்கின் விசாரணையை பிப்ரவரி 1-ஆம் தேதிக்கு நீதிபதி தள்ளிவைத்தார்.



தென்காசி மாவட்டம், கீழப்பாவூர் 1-வது வார்டு நியாய விலை கடையில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆணைப்படி ரூ. 1000, 1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சர்க்கரை, 1 கரும்பு ஆகிய பொங்கல் தொகுப்பினை பேரூராட்சி மன்ற தலைவர் ராஜன் தலைமையில், துணைத் தலைவர் ராஜசேகர் முன்னிலையில், விநாயகப் பெருமாள் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் திமுக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்துகொண்டு பொங்கல் தொகுப்பை பெற்றுச் சென்றனர்.

# 17வது மக்களவையின் இறுதி கூட்டத் தொடர் ஜன. 31ம் தேதி முதல் தொடங்கி பிப். 9 வரை நடைபெறும் : பிரகலாத் ஜோஷி தகவல்



புதுடெல்லி : ஜன. 13, மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் பிப்ரவரி 1ம் தேதி மத்திய இடைக்கால பட்ஜெட்டை தாக்கல் செய்வார் என நாடாளுமன்ற விவகாரத் துறை அமைச்சர் பிரகலாத் ஜோஷி அறிவித்துள்ளார்.

இந்த ஆண்டு மக்களவைத் தேர்தல் நடைபெற உள்ளதால் இடைக்கால பட்ஜெட் மட்டுமே தாக்கல் செய்யப்பட உள்ளது. அதன்படி வரும் ஜனவரி 31ம் தேதி முதல் பிப்ரவரி 9ம் தேதி வரை பட்ஜெட் கூட்டத் தொடர் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், இந்தக் கூட்டத்தொடரில் குடியரசு தலைவர் திரௌபதி முர்மு நாடாளுமன்றத்தில் உரையாற்ற உள்ளார்.

இது தொடர்பாக நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் பிரகலாத் ஜோஷி எக்ஸ் வலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "இடைக்கால பட்ஜெட் கூட்டத்தொடர் - 2024, பதினேழாவது மக்களவையின் கடைசி கூட்டத்தொடர் ஜனவரி 31 முதல் பிப்ரவரி 9 வரை, குடியரசுத் தலைவரின் நாடாளுமன்ற உரையுடன் நடைபெற உள்ளது.

பிப்ரவரி 1ம் தேதி, நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் இடைக்கால பட்ஜெட்டை தாக்கல் செய்வார் "என குறிப்பிடப்பட்டுள்ளது. 17வது மக்களவையின் பதவிக்காலம் வரும் ஜூன் 16ம் தேதியுடன் முடிவடைகிறது. வரும் ஏப்ரல் - மே மாதங்களில் நடைபெற உள்ள மக்களவைத் தேர்தலுக்குப் பிறகு புதிதாக பதவியேற்கும் அரசு 2024-25ம் நிதியாண்டுக்கான பட்ஜெட்டை பின்னர் தாக்கல் செய்யும்.

## ராமர் கோயில் திறப்பு விழாவை

# காங். புறக்கணிப்பது 100 கோடி மக்களை அவமதிக்கும் செயல் : வானதி சீனிவாசன்



கோவை : ஜன. 13, ராமர் கோயில் கும்பாபிஷேகத்தை புறக்கணிப்பது 100 கோடி மக்களை அவமதிக்கும் செயல் என, காங்கிரஸுக்கு பாஜக தேசிய மகளிரணி தலைவரும், கோவை தெற்கு தொகுதி எம்.எல். ஏவுமான வானதி சீனிவாசன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது : காங்கிரஸ் கட்சியின் தேசிய பொதுச்செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் வெளியிட்ட அறிக்கையில், அயோத்தியில் நடைபெறவுள்ள ஸ்ரீராமர் கோயில் மகா கும்பாபிஷேக விழாவில், காங்கிரஸ் முன்னாள் தலைவர் சோனியா காந்தி, தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, மக்களவை காங்கிரஸ் கட்சித் தலைவர் ஆதிர் ரஞ்சன் சவுத்ரி ஆகியோர் பங்கேற்க மாட்டார்கள் என அறிவித்துள்ளார். ஸ்ரீராமர் பிறந்த அயோத்தியில் அவருக்கு கோயில் கட்ட வேண்டும் என்பது, 100 கோடிக்கும் அதிகமான நாட்டு மக்களின் பல நூற்றாண்டு கால கனவு. அதனால்தான், காங்கிரஸ் உள்பட அனைத்து அரசியல் கட்சிகள், அமைப்புகள், முக்கிய பிரமுகர்களுக்கும், ஸ்ரீராம ஜென்மபூமி தீர்த்த ஷேத்ர அறக்கட்டளை அழைப்பிதழ்களை வழங்கியது.

காங்கிரஸ் கட்சி, ஸ்ரீராமர் கோயில் ஆர்எஸ்எஸ், பாஜகவின் நிகழ்ச்சி நிரல் எனக் கூறி கும்பாபிஷேக அழைப்பிதழை நிராகரிப்பதாக அறிவித்துள்ளது. அயோத்தி ஸ்ரீராமர் கோயில் கும்பாபிஷேகத்தை புறக்கணித்ததன் மூலம் காங்கிரஸ் கட்சியின் உண்மையான முகம் அம்பலமாகியுள்ளது.

சட்ட ரீதியாக, யாருடைய எதிர்ப்பும் இல்லாமல், அனைவரின் ஆதரவோடு, அனைத்துத் தரப்பினரும் பெரு மகிழ்ச்சி அடையும் வகையில் அயோத்தியில் ஸ்ரீராமர் கோயில் கட்டப்பட்டுள்ளது. எது நடக்கவே நடக்காது என நினைத்தார்களோ அதை பிரதமர் நரேந்திர மோடி சாதித்துக் காட்டியுள்ளார்.

மீண்டும் ஸ்ரீராமர் பேரலை நாடெங்கும் பரவுவதை அவர்கள் விரும்பவில்லை என்பதையே, காங்கிரஸின் இந்த புறக்கணிப்பு காட்டுகிறது. ஸ்ரீராமர் கோயில் கும்பாபிஷேக அழைப்பிதழை நிராகரிக்கிறோம் என்பது 100 கோடிக்கும் அதிகமான இந்துக்களை அவமதிக்கும் செயல். ஆணவத்தின் வெளிப்பாடு.

இதற்கு கடும் கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறோம். இதற்காக நாட்டு மக்களிடம் காங்கிரஸின் உண்மையான தலைமை பகிரங்க மன்னிப்பு கேட்க வேண்டும் என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது

# சங்கரன்கோவிலில் சமத்துவ பொங்கல் விழா



சங்கரன்கோவில் : ஜன. 13, சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் வடக்கு மாவட்ட திமுக சார்பில் சமத்துவ பொங்கல் விழா நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு மாவட்ட அவை தலைவர் பத்மநாபன் தலைமை வகித்தார். தலைமை செயற்குழு உறுப்பினர்கள் யூஎஸ்டி சீனிவாசன், பரமகுரு, மாநில மருத்துவ அணி துணைச்செயலாளர் மருத்துவர் சு.சே.செண்பக விநாயகம், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி மாவட்ட செயலாளர் லிங்கவளவன், நுகர்வோர் பாதுகாப்பு பேரவை முகமது அலி, திமுக வடக்கு மாவட்ட பொருளாளர் சரவணன், மாவட்ட துணை செயலாளர்கள் புனிதா, ராஜதுரை, மனோகரன் முன்னிலை வகித்தனர். இதில் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ சமத்துவ பொங்கல் நிகழ்ச்சியை துவக்கி வைத்தார். தொடர்ந்து பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர்கள் லாலாசங்கரபாண்டியன், கடற்கரை பொன்முத்தையாபாண்டியன், சேர்மதுரை, கிறிஸ்டோபர், பெரியதுரை, மதிமாரிமுத்து, ராமச்சந்திரன், நகர செயலாளர்கள் சங்கரன்கோவில் பிரகாஷ், புளியங்குடி அந்தோணிசாமி, பேரூர் கழகச் செயலாளர் மாரிமுத்து, பொதுக்குழு உறுப்பினர்கள் தேவா என்ற தேவதாஸ், மாரிச்சாமி, சாகுல்ஹமீது, சார்பு அணி அமைப்பாளர்கள் வக்கீல்கள் பிச்சையா, காசிராஜன், பசுபதிபாண்டியன், பிரேம்குமார், சந்திரன், கணேசன், குருவசந்த், அப்பாஸ் அலி, மாவட்ட பிரதிநிதிகள் செய்யதுஅலி, டைட்டஸ் ஆதித்தன், நகர அவைத் தலைவர் முப்பிடாதி, மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள் வெள்ளத்துரை, வக்கீல் முத்துராமலிங்கம், முத்துக்குமார், ஜோதிராஜ், கார்த்தி, மணிகண்டன், காளிராஜ், கலைச்செல்வன், ரஜினிகாந்த், ராஜவேல்ரத்தினம், கேபிள் கணேசன், பாரதிராஜா, நீலமேகம், ஆயில்ராஜாபாண்டியன், சிவாஜி மற்றும் மகளிர் அணி நிர்வாகிகள் முன்னாள் யூனியன் சேர்மன் அன்புமணி கணேசன், உமா மகேஸ்வரி, தமிழ்செல்வி, அண்ணாமலை, நகரத் துணைச் செயலாளர்கள் சுப்புத்தாய், முத்துக்குமார், விடுதலை சிறுத்தைகள் கட்சி தொகுதிசெயலாளர் பீர் மைதீன் மற்றும் வீரமணி வீராசாமி, வெங்கடேஷ், வக்கீல்கள் கண்ணன், ஜெயக்குமார், ஜலால், ஜெயக்குமார், வக்கீல் செந்தில், கணேசன், கார்த்தி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



அரசு தொழில்நுட்ப கல்வி இயக்ககம் ஆணையரின் அறிவுறுத்தலின்படி பெரம்பலூர் மாவட்டம் கீழக்கனவாய் அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி கல்லூரியில் முதலாவது பட்டமளிப்பு விழா நடைபெற்றது. இவ்விழாவில் 75 மாணவர்கள் பட்டம் பெற்றனர். கல்லூரியின் முதல்வர் முகேஷ் குமார் நிகழ்விற்கு தலைமை தாங்கினார். இந்நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினராக பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் பிரபாகரன் கலந்துகொண்டு விழாவினை சிறப்பித்தார். மேலும் இந்நிகழ்வினை அனைத்து துறை தலைவர்களும் ஆசிரியர்களும் மற்றும் ஆசிரியர் அல்லா பணியாளர்கள் அமைச்சு பணியாளர்கள் ஆகியோர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர்.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.

வரலாறு விளையாட்டு

# ஒலிம்பிக் போட்டிக்கு ரிதம் சங்க்வான் தகுதி

## முதன்முறையாக 16 பேர் தகுதி பெற்று சாதனை



**ஜகார்த்தா : ஜன. 13,**

**பாரீஸ் ஒலிம்பிக் போட்டிக்கான துப்பாக்கி சுடுதல் ஆசிய தகுதி சுற்று இந்தோனேஷியாவின் ஜகார்த்தா நகரில் நடைபெற்று வருகிறது.**

இதில் மகளிருக்கான 25 மீட்டர் பிஸ்டல் பிரிவில் இந்தியாவின் ரிதம் சங்க்வான் இறுதிப் போட்டியில் 28 புள்ளிகள் சேர்த்து வெண்கலப் பதக்கம் வென்றார். கொரியாவைச் சேர்ந்த யங் ஜின் 41 புள்ளிகளுடன் முதலிடம் பிடித்துதங்க பதக்கமும் அதே நாட்டைச் சேர்ந்த மற்றொரு வீராங்கனையான கிம் யெஜி 32 புள்ளிகளுடன் வெள்ளிப் பதக்கமும் பெற்றனர்.

இந்த பிரிவில் பாரீஸ் ஒலிம்பிக் போட்டிக்கு இரு வீராங்கனைகள் தேர்வு செய்யப்படுவார்கள். கொரியாவை சேர்ந்த இரு வீராங்கனைகள் ஏற்கெனவே இந்த பிரிவில் ஒலிம்பிக் போட்டிக்கு தகுதி பெற்றிருந்தனர். இதனால் யங் ஜின், கிம் யெஜி ஆகியோர் பதக்கத்துக்காக மட்டுமே இந்த போட்டியில் விளையாடினார்கள். இதனால் 3-வது இடம் பிடித்த இந்தியாவின் ரிதம் சங்க்வானும், சீன தைபேவை சேர்ந்த வூ சியா யிங்கும் பாரீஸ் ஒலிம்பிக் போட்டிக்கு தகுதி பெற்றார்கள்.

இதுவரை பாரீஸ் ஒலிம்பிக் போட்டிக்கு துப்பாக்கி சுடுதலில் இந்தியாவில் இருந்து 16 பேர் தகுதிபெற்றுள்ளனர். இந்த வகையில் இது சாதனையாக அமைந்துள்ளது. இதற்கு முன்னர் அதிகபட்சமாக 2020-ம் ஆண்டு டோக்கியோ ஒலிம்பிக் போட்டியில் நடைபெற்ற துப்பாக்கி சுடுதலில் இந்தியாவில் இருந்து 15 பேர் பங்கேற்றிருந்தனர். இந்த சாதனை தற்போது முறியடிக்கப்பட்டுள்ளது.

# மல்யுத்தத்தில் தங்கம் வென்றார் அமன் ஷெராவத்



**ஜாக்ரெப் : ஜன. 13,**

**குரோஷியா நாட்டின் தலைநகரான ஜாக்ரெப்பில் ஜாக்ரெப் ஓபன் மல்யுத்த போட்டி நடைபெற்று வருகிறது.**

தரவரிசைதொடரான இதில் 57 கிலோ எடைப்பிரிவு இறுதிப் போட்டியில் இந்தியாவின் அமன் ஷெராவத், உலகத் தரவரிசையில் 7-வது இடத்தில் உள்ளசீனாவின்வான்ஹாவோ சூ உடன் மோதினார். இதில் அமன் ஷெராவத் 10-0 என்ற புள்ளிகள் கணக்கில் வெற்றி பெற்று தங்கப் பதக்கம் வென்றார்.

முன்னதாக நடைபெற்ற முதல் சுற்றில் தரவரிசையில் 13-வது இடத்தில் உள்ள அமன் ஷெராவத் 15-4 என்ற கணக்கில்துருக்கியின்முகமது கரவுஸையும், கால் இறுதி சுற்றில் 11-0 என்ற கணக்கில் அமெரிக்காவின் ரிச்சர்ட்ஸ் ஜேன் ரே ரோட்ஸையும், அரை இறுதியில் 11-0 என்ற கணக்கில் ஜார்ஜியாவின் ராபர்டி திங்காஷ்விலியையும் தோற்கடித்தார்.

86 கிலோ எடைப் பிரிவில் இந்தியாவின் தீபக் பூனியா முதல் சுற்றில் கஜகஸ்தானின் அசாமத் தவுலத்பெகோவிடம் தோல்வி அடைந்தார். எனினும் அசாமத் இறுதி சுற்றுக்கு முன்னேறியதால் தீபக் பூனியாவுக்கு ரெப்பேஜ் சுற்றில் விளையாடுவதற்கான வாய்ப்பு கிடைத்தது. ஆனால் இதை அவர், சரியாக பயன்படுத்திக் கொள்ளத் தவறினார்.

# விபத்தில் இரண்டு கைகளை இழந்தாலும் காலில் பௌலிங் : அசர வைக்கும் கிரிக்கெட் வீரர்



**ஜம்மு-காஷ்மீர் : ஜன. 13,**

**ஜம்மு-காஷ்மீரில் கழுத்து, தோள்பட்டை இடையே பேட்டிங் செய்தும், காலில் பந்துவீசியும் அதிசயிக்க வைக்கும் மாற்றுத் திறனாளி வீரர், பாரா கிரிக்கெட் அணியின் கேப்டனாக உயர்ந்துள்ளார்.**

ஜம்மு-காஷ்மீரின் அனந்த்நாக் மாவட்டம், வாகாமா கிராமம் பிஜ்பெஹாராவைச் சேர்ந்தவர் அமீர் உசேன். 34 வயதான இவர் மாற்றுத் திறனாளி கிரிக்கெட் வீரர். அமீர் உசேனின் ஆசிரியர், அவரது கிரிக்கெட் திறமையைக் கண்டறிந்து 'பாரா கிரிக்கெட்'-டில் அறிமுகப்படுத்தினார். பின்னர், கடந்த 2013 முதல் அமீர் உசேன் தொழில் முறை கிரிக்கெட் விளையாடி வருகிறார்.

இவர் தனது தோள்பட்டைக்கும் கழுத்துக்கும் இடையில் பேட்டைப் பிடித்து பேட்டிங் செய்கிறார். தனது கால்களைப் பயன்படுத்தி பந்து வீசுகிறார். அமீர் தனது திறமையால், தற்போது ஜம்மு-காஷ்மீரின் பாரா கிரிக்கெட் அணியின் கேப்டனாக உயர்ந்துள்ளார். இவர் இந்திய கிரிக்கெட் அணியின் ஜெர்சி அணிந்து, தனது வித்தியாசமான முறையில் பேட்டிங், பௌலிங் செய்யும் வீடியோ சமூக வலைதளங்களில் வெளியாகி அனைவரையும் கவர்ந்துள்ளது. அமீர் தனது 8 வயதில் தனது தந்தையின் ஆலையில் ஏற்பட்ட விபத்தில் தனது இரண்டு கைகளையும் இழந்தார்.

அமீர் உசேன் சிறுவனாக இருந்தபோது, ஜோதி நகரில் அவரது வீட்டிற்குள் நுழைந்த கொள்ளையர்களை நோக்கி, பொம்மை துப்பாக்கியைக் காண்பித்து பீதியுடன் ஓடச் செய்ததாககவும் அவர் குறித்த சுவாரஸ்யமான தகவல் வெளியாகி உள்ளது. விபத்தில் கைகளை இழந்தாலும், மனதில் நம்பிக்கையை இழக்காத அமீர் உசேனின் அசாத்திய முயற்சி, சாதனை அனைவருக்கும் உத்வேகம் அளிப்பதாக உள்ளது.

# மலேசிய ஓபன் பாட்மிண்டன் கால் இறுதி சுற்றில் சாட்விக் – ஷிராக் ஜோடி



**கோலாலம்பூர் : ஜன. 13,**

**மலேசிய ஓபன் பாட்மிண்டன் தொடரில் ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் சாட்விக் சாய்ராஜ் ராங்கிரெட்டி, ஷிராக் ஷெட்டி ஜோடி கால் இறுதி சுற்றுக்கு முன்னேறியது. அதேவேளையில் ஆடவர் ஒற்றையர் பிரிவு 2-வது சுற்றில் இந்தியாவின் கிடாம்பி ஸ்ரீகாந்த் தோல்வி அடைந்தார்.**

மலேசியாவின் கோலாலம்பூரில் நடைபெற்று வரும் இந்தத்தொடரில் ஆடவர் ஒற்றையர் பிரிவு 2-வது சுற்றில் இந்தியாவின் கிடாம்பி ஸ்ரீகாந்த், முன்னாள் உலக நம்பர் ஒன் வீரரான ஹாங்காங்கின் லாங் அங்கஸ்ஸுடன் மோதினார். இதில் ஸ்ரீகாந்த் 13-21, 17-21 என்ற நேர் செட்டில் தோல்வி அடைந்தார்.

ஆடவர் இரட்டையர் பிரிவு 2-வது சுற்றில் உலகத் தரவரிசையில் 2-வது இடத்தில் உள்ள இந்தியாவின் சாட்விக் சாய்ராஜ் ராங்கி ரெட்டி, ஷிராக் ஷெட்டி ஜோடியானது 36-வது இடத்தில் உள்ள பிரான்ஸின் லூகாஸ் கோர்வி, ரோனன் லாபர் ஜோடியை எதிர்கொண்டது. இதில் சாட்விக்-ஷிராக் ஜோடி 21-11, 21-18 என்ற நேர் செட்டில் வெற்றி பெற்று கால் இறுதி சுற்றுக்கு முன்னேறியது. கால் இறுதி சுற்றில் இந்திய ஜோடியானது தரவரிசையில் 32-வது இடத்தில் உள்ள சீனாவின் ஹீ ஜி டிங், ரென் ஜியாங் ஜோடியுடன் மோதுகிறது.

மகளிர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் அஸ்வினி பொன்னப்பா, தனிஷா கிரஸ்டோ ஜோடியும் கால் இறுதி சுற்றுக்கு முன்னேறியது. இந்த ஜோடி தங்களது 2-வது சுற்றில் போட்டித் தரவரிசையில் 7-வது இடத்தில் உள்ள ஜப்பானின் வகானா நாகஹாரா, மயூ மட்சுமோட்டோ ஜோடியை 21-19, 13-21, 21-15 என்ற செட் கணக்கில் வீழ்த்தியது.

# ஹாலிவுட் பாணியில் ஹெலிகாப்டரில் பிரம்மாண்ட என்ட்ரி – வைரலாகும் வார்னரின் வீடியோ



**சிட்னி : ஜன. 13,**

**ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரர் டேவிட் வார்னர், ஹாலிவுட் சினிமா பாணியில் மைதானத்துக்குள் ஹெலிகாப்டரில் வந்திறங்கிய வீடியோ வைரலாகி வருகிறது.**

தற்போதைய கிரிக்கெட் உலகில் ஜாம்பவான் வீரர்களில் ஒருவராக அறியப்படுபவர் ஆஸ்திரேலியாவின் டேவிட் வார்னர். சமீபத்தில் பாகிஸ்தானுக்கு எதிராக சிட்னியில் நடந்த கடைசி போட்டியே டெஸ்ட் கிரிக்கெட்டில் வார்னருக்கும் கடைசி போட்டி. டெஸ்ட் கிரிக்கெட்டில் ஓய்வு பெற்றுவிட்டார். கடைசி இன்னிங்ஸில் அபார அரைசதம் விளாசி வெற்றியுடன் விடைபெற்றுள்ளார். ஏற்கெனவே ஒருநாள் போட்டிகளில் இருந்தும் ஓய்வு அறிவித்துள்ளதால் கிட்டத்தட்ட சர்வதேச கிரிக்கெட்டில் டேவிட் வார்னரின் சகாப்தம் முடிவுக்கு வந்துவிட்டது.

எனினும் சர்வதேச டி20, பிரீமியர் லீக் டி20 போட்டிகளில் தொடர்ந்து விளையாடுவதில் ஆர்வம் காட்டி வருகிறார் வார்னர். அந்த வகையில் ஆஸ்திரேலிய பிரீமியர் லீக் தொடரான பிக் பாஷ் லீக் தொடரில் தற்போது பங்கேற்று விளையாடி வருகிறார் வார்னர். இதில் சிட்னி தண்டர் அணிக்காக இரண்டாம் ஆண்டு களமிறங்க உள்ள அவர், அதற்காக சிட்னி மைதானத்துக்கு ஹாலிவுட் சினிமா பாணியில் ஹெலிகாப்டரில் பிரமாண்ட என்ட்ரி கொடுத்தார்.

சிட்னி தண்டர் மற்றும் சிட்னி சிக்சர்ஸ் இடையே நேற்று போட்டி நடைபெற்றது. தனது சகோதரரின் திருமணத்தில் கலந்துகொள்வதற்காக சென்ற வார்னர், போட்டிக்கு முன்னதாக மைதானத்துக்கு ஹெலிகாப்டரில் வந்திறங்கினார். இந்த வீடியோ காட்சிகள் தற்போது இணையத்தில் வைரலாகி வருகின்றன.

இதற்கிடையே, பிக் பாஷ் லீக் போலவே ஐக்கிய அரபு எமிரேட்ஸில் நடைபெறவுள்ள ஐஎல்டி20 போட்டிகளிலும் வார்னர் பங்கேற்கவுள்ளார். ஐபிஎல் தொடரிலும் விளையாட இருக்கும் அவர் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான டி20 தொடரில் ஆஸ்திரேலிய அணி சார்பில் களமிறங்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

# சொந்த ஊருக்கு சாலை வசதி ஏற்படுத்தி தருவதே லட்சியம் பாரா பவர் லிஃப்டிங்கில் பதக்கம் வென்ற வி.சரவணன் உறுதி



**உதகை : ஜன. 13,**

**சொந்த ஊருக்கு சாலை வசதி ஏற்படுத்தி தருவதே லட்சியம் என்று, டெல்லியில் பாரா பவர்லிஃப்டிங்கில் வெள்ளி பதக்கம் வென்ற வி.சரவணன் தெரிவித்தார்.**

நீலகிரி மாவட்டம் ஜெகதளா பேரூராட்சி குண்டாடா கிராமத்தை சேர்ந்த தம்பதி விஜயன்-அஞ்சலா ஆகியோரின் மகன் வி.சரவணன் (35). மாற்றுத்திறனாளியான இவர், டெல்லி ஜவஹர்லால் நேரு ஸ்டேடியத்தில் நடந்த கேலோ இந்தியா பாரா கேம்ஸ் போட்டியில் பாரா பவர் லிஃப்டிங் போட்டியில் தமிழ்நாடு சார்பில் கலந்துகொண்டார். 65 கிலோ எடை பிரிவில் 150 கிலோ எடையை தூக்கி தேசிய அளவில் இரண்டாம் இடம் பெற்று வெள்ளி பதக்கம் பெற்றார்.

இவரை கவுரவப்படுத்தும் வகையில், அவர் பணிபுரியும் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலஅலுவலகத்தில், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் என்.எஸ்.ராஜேஷ்குமார் தலைமையில், தமிழ்நாடு காப்பாளர் சங்கத்தின் மாநில பொருளாளர் டிவேணுகோபால் மற்றும் சக காப்பாளர்கள் முன்னிலையில் பாராட்டு விழா நடைபெற்றது.

விழாவில், வி.சரவணன் பேசும்போது, ''இப்போட்டியில் கலந்துகொள்ள உதவிய மற்றும் அனைத்து உதவிகளையும் செய்த தமிழ்நாடு பாரா ஸ்போர்ட்ஸ் அசோசியேஷனுக்கும், தமிழ்நாடு அரசுக்கும், ஊக்கமளித்த சக பணியாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். வரும் போட்டிகளில் இந்தியாவுக்காக தங்கப் பதக்கம் பெற்று, எங்கள் ஊருக்கு சாலை வசதி ஏற்படுத்தி தருவதே எனது லட்சியம்'' என்றார்.

வரலாறு சினிமா

# "இந்தி தெரியாது போயா" கீர்த்தி சுரேஷின் 'ரகு தாத்தா' டீசர்



**சென்னை : ஜன. 13,**

**இந்திக்கு எதிர்ப்புத் தெரிவிப்பது போல் நடிகை கீர்த்தி சுரேஷ் நடித்திருக்கும் 'ரகு தாத்தா' படத்தின் டீசர் வெளியாகி தற்போது அது இணையத்தில் வைரலாகி வருகிறது.**

சினிமாவில் ஹீரோவுடன் பெயரளவுக்கு கமர்ஷியல் படங்கள் என்பதையும் தாண்டி நடிகைகள் ஹீரோயின் சென்ட்ரிக் படங்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்து வருகின்றனர். இதில் நடிகை கீர்த்தி சுரேஷும் முக்கியமானவர். அவர் 'மாமன்னன்', 'சைரன்' என ஹீரோ சப்ஜெக்ட் படங்களில் கதாநாயகியாக நடித்து வரும் அதேசமயம், 'ரகு தாத்தா', 'ரிவால்வர் ரீட்டா' என ஹீரோயின் சென்ட்ரிக் படங்களிலும் நடித்து வருகிறார்.

ஜெயம் ரவியுடன் இவர் நடித்துள்ள 'சைரன்' திரைப்படம் நேரடியாக ஓடிடியில் வெளியாகும் எனச் சொல்லப்படுகிறது. இந்த நிலையில்தான், சுமன் இயக்கத்தில் கீர்த்தி சுரேஷ் நடித்துள்ள 'ரகு தாத்தா' படத்தின் டீசர் வெளியாகியுள்ளது.

தமிழகத்தில் நடந்த இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை மையமாகவைத்து இந்தப்படம் உருவாகி உள்ளது. தற்போது வெளியாகி இருக்கும் டீசரில் இந்தித் திணிப்புக்கு எதிரான வசனங்களும் இடம்பெற்று உள்ளது. குறிப்பாக, "இந்தியை திணிப்போம் என கூறினால் இந்தி தெரியாது போயா என சொல்லுவோம்", "இந்தி தெரிந்தால் தான் புரோமோஷனா" என கீர்த்தி சுரேஷ் பேசும் வசனங்கள் கவனம் பெற்றுள்ளது.

# தமிழில் நடிக்க வருகிறார் தேவயானி சர்மா



**ஐதராபாத் : ஜன. 13,**

**டெல்லியை பூர்வீகமாக கொண்ட நடிகை தேவயானி சர்மா, இந்தி மற்றும் தெலுங்கு படங்களில் நடிக்கிறார்.**

2021ம் ஆண்டு, ரொமான்டிக் என்ற தெலுங்கு படத்தின் மூலம் கதாநாயகியாக திரையுலகத்திற்கு அறிமுகமான இவர் தமிழில் அறிமுகமாகிறார். அவர் கூறுகையில், 'இந்தி, தெலுங்கு என்ற மொழிகளில் நான் படங்கள் பண்ணினாலும் எனக்கு தமிழில் படம் பண்ண வேண்டும் என்று ஆசை எப்பொழுதும் உள்ளது.

சாதாரண கதாநாயகியாக மட்டுமில்லாமல், என் நடிப்பு திறனை முழுவதும் செயல்படுத்தி மக்கள் அனைவரும் விரும்பும் ஒரு நடிகையாக வலம் வர வேண்டும். கீர்த்தி சுரேஷ், சாய் பல்லவி இவர்களெல்லாம் எனக்கு மிகவும் பிடித்த நடிகைகள், இவர்கள்தான் எனக்கு முன்னுதாரணம். வாழ்வில் என்னுடைய லட்சியம் என்னவென்றால் சிம்புவிற்கு ஜோடியாக நடிப்பதே. இதற்கான ஒரு முழு வீச்சில் இறங்கி உள்ளேன், அதற்கான வேலையும் தொடங்கி விட்டது' என்றார்.

# அயலான் நேர்த்தியான கிராபிக்ஸ் உடன் 'நிறைவு' தந்ததா ஏலியன் கதைக்களம்



**சென்னை : ஜன. 13,**

**தமிழ்சினிமா அதிகளவில் கையில் எடுக்காத ஜானர் என்றால், அது சயின்ஸ் ஃபிக்ஷதான். அந்தக் குறையை போக்கும் வகையில் 2015-ஆம் ஆண்டு ஒரு முழுமையான சயின்ஸ் ஃபிக்ஷன் படமாக வெளியானது 'இன்று நேற்று நாளை'. காலப் பயணத்தை எளிய ரசிகனுக்கும் புரியும் வகையில் மிக நேர்த்தியாக எடுக்கப்பட்ட அந்தப் படம் வெளியாகி சுமார் 9 ஆண்டுகளுக்குப் பிறகு தனது இரண்டாவது படத்துடன் வந்துள்ளார் இயக்குநர் ரவிகுமார். இந்த நீண்ட காத்திருப்புக்கான பலனை 'அயலான்' அறுவடை செய்ததா என்பதை பார்ப்போம்.**

விண்வெளியில் இருந்து பூமியை வந்து தாக்கும் ஒரு விண்கல்லில் இருந்து சிதறிய 'ஸ்பார்க்' என்ற ஒரு வஸ்து வில்லனின் கையில் கிடைக்கிறது. அதைக் கொண்டு பூமியின் மையப்பகுதி வரை தோண்டி, அதில் கிடைக்கும் வளங்களை அபகரிப்பதே வில்லனின் நோக்கம். இன்னொரு பக்கம், கிராமத்தில் தாயுடன் விவசாயம் செய்து வரும் நாயகன் தமிழ் (சிவகார்த்திகேயன்) சுற்றுச்சூழல் பாதுகாப்பிலும் தீவிர அக்கறை கொண்டவர். பிழைப்புதேடி சென்னை வரும் அவர், பிறந்தநாள் சர்ப்ரைஸ் பார்ட்டிகள் ஏற்பாடு செய்யும் கருணாகரன், யோகிபாபு டீமுடன் சேர்ந்து கொள்கிறார்.

பூமியில் இருக்கும் ஸ்பார்க் என்ற வஸ்துவை தேடி வேற்று கிரகத்தில் இருந்து வரும் ஒரு ஏலியன், அதனை எடுக்க வில்லனின் இடத்துக்கு செல்லும்போது, வில்லனின் ஆட்களால் தாக்கப்பட்டு அவர்களிடம் தனது விண்கலத்தையும் இழக்கிறது. இதன்பிறகு சிவகார்த்திகேயனை சந்திக்கும் ஏலியன், அவருடன் சேர்ந்து வில்லனின் நோக்கத்தை முறியடித்ததா? ஏலியனின் விண்கலம் மீண்டும் கிடைத்ததா என்பதே 'அயலான்' சொல்லும் திரைக்கதை.

இந்தப் படம் 2017-ஆம் ஆண்டு வாக்கில் தொடங்கப்பட்டது. கிராபிக்ஸ் தாமதம் உள்ளிட்ட பல்வேறு சிக்கல்களில் இருந்து மீண்டு ஒரு வழியாக இப்போது வெளியாகியுள்ளது. இந்த இடைப்பட்ட காலத்தில் இயக்குநர், இப்படத்தை விட்டுவிட்டு வேறு படத்தில் இறங்கவில்லை. முழுமூச்சாக இந்தப் படத்தை திரைக்கு கொண்டு வரவேண்டும் என்று படக்குழு தீவிரமாக உழைத்ததன் விளைவு, தொழில்நுட்பரீதியாக தரமான ஒரு படமாக 'அயலான்' வந்துள்ளது.

தமிழில் இதுவரை பார்த்திராத அளவு கிராபிக்ஸ் காட்சிகளில் அத்தனை நேர்த்தி. குறிப்பாக, ஏலியனின் உடல் பாகங்கள் தொடங்கி அதன் அசைவுகள், உடல்மொழி வரை துல்லியமாக உருவாக்கப்பட்டுள்ளன. தொழில்நுட்பக்குழுவினருக்கு ஸ்பெஷல் பாராட்டுகள். வழக்கமாக இந்திய சினிமாக்களில் கிராபிக்ஸ் சொதப்ப காரணம், அதன் லைட்டிங்கில் கவனம் செலுத்தாததுதான் என்று கூறப்படுவதுண்டு. ஆனால் இதில் படம் முழுக்க அப்படியான குறை எதுவும் இல்லாமல் துல்லியமான கிராபிக்ஸ் பயன்படுத்தப்பட்டுள்ளது சிறப்பு. ஏலியனும் கியூட்டாக வடிவமைக்கப்பட்டுள்ளதால் குழந்தைகளை கவர வாய்ப்புள்ளது.

படம் தொடங்கி முதல் 30 நிமிடங்கள், விவசாயம், கார்ப்பரேட் வில்லன், தமிழ் சினிமாவின் டிபிக்கல் ஹீரோயின் என அதேபுளித்துப் போன க்ளிஷே காட்சிகள். சுற்றுச்சூழல் ஆர்வலராக இருக்கும் ஹீரோ, பிழைப்பு தேடி சென்னை வருகிறார். அங்கு வரும் ஏலியனுக்கும் இவருக்குமான நட்பு எப்படி ஏற்படுகிறது என்பதை சொல்ல ஏன் இவ்வளவு இழுபறி என்று தெரியவில்லை. சென்னையில் சிவகார்த்திகேயன் ஏலியனை சந்தித்த பிறகு படம் நிமிர்ந்து உட்கார வைக்கிறது. அதனைத் தொடர்ந்து வரும் காட்சிகள், குறிப்பாக யோகிபாபு - கருணாகரன் கூட்டணி ஏலியனை முதன்முறையாக சந்திக்கும் காட்சிகள் தொடங்கி இடைவேளை வரை வரும் காட்சிகள் சிறப்பாக எழுதப்பட்டுள்ளன.

இடைவேளைக்குப் பின்பு, அங்கொன்றும் இங்கொன்றுமாய் சில காட்சிகள் கைகொடுத்திருந்தாலும், க்ளைமாக்ஸை நோக்கி நகரும் காட்சிகள் உள்ளிட்ட பல காட்சிகள் அழுத்தமாக இல்லை. அதேபோல, படத்தில் ஏலியன் தொடர்பான காட்சிகளில் கிராபிக்ஸ் தவிர்த்து புதுமையாகவோ, புத்திசாலித்தனமாகவோ அந்த அம்சமும் இடம்பெறாதது குறை. சிவகார்த்திகேயன் - ஏலியன் இடையிலான எமோஷனல் காட்சிகளில் கூடுதல் கவனம் செலுத்தியிருக்கலாம். வில்லனின் கதாபாத்திரமும் வலுவாக வடிவமைக்கப்படாததால் ஹீரோ - வில்லன் - ஏலியன் மோதல் காட்சிகள் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தவில்லை.

சிவகார்த்திகேயன் வழக்கமாக தனக்குள்ள துவருமோ அதை குறையில்லாமல் செய்திருக்கிறார். முதல் பாதியில் வரும் யோகிபாபு - கருணாகரன் கூட்டணியின் நகைச்சுவை காட்சிகள் படத்தை கலகலப்பாக கொண்டுசெல்ல உதவுகின்றன. வழக்கம்போல கமர்ஷியல் தமிழ் படத்தில் ஹீரோயினுக்கு என்ன வேலையோ அதேதான் ரகுல் ப்ரீத் சிங்கிற்கு. படம் முழுக்க ஹீரோவுக்கு துணையாக வந்து செல்வதை தவிர உருப்படியான வேலை எதுவும் செய்யவில்லை.

வில்லனாக வரும் ஷரத் கெல்கர் பளபள ஹேர்ஸ்டைலுடன் வழக்கமான கார்ப்பரேட் வில்லனாக வந்து செல்கிறார். வில்லன் கைகாட்டுபவர்களை கொன்று கொண்டே இருக்கும் கேரக்டர் இஷா கோபிகருக்கு. ஒரு டயலாக் கூட இல்லாத பரிதாபமான கதாபாத்திரம். சித்தார்த்தின் குரல் ஏலியனுக்கு சிறப்பாக பொருந்துகிறது.

முன்பே குறிப்பிட்டதைப் போல தரமான கிராபிக்ஸ் இப்படத்தின் பெரும் பலம். அதனை படம் முழுக்க கைகொடுத்து தூக்கி நிறுத்துகிறது நீரவ் ஷாவின் சிறப்பான ஒளிப்பதிவு. ஏ.ஆர். ரஹ்மானின் பின்னணி இசையில் குறிப்பிட்டுப் பாராட்டும்படி எதுவும் இல்லை. பாடல்கள் ஒன்றுகூட நன்றாக இருக்கக் கூடாது என்பதற்காக கடுமையாக உழைத்திருக்கிறார். வில்லனின் ஆய்வகம், கருணாகரனின் வீடு / ஆபீஸ், ஏலியன் விண்கலம் ஆகியவற்றில் கலை இயக்குநர் முத்துராஜின் உழைப்பு தெரிகிறது.

சயின்ஸ்பிக்ஷன் என்றதும் புதுமையான, ஆழமான விஷயங்கள் ஏதேனும் இருக்கும் என்று எதிர்பார்த்துச் சென்றால் ஏமாற்றமே கிடைக்கும். ஆனால், ஒரு பொழுதுபோக்குப் படமாக எதிர்பார்த்து செல்வோர் குடும்பத்துடன் ஜாலியாக 'அயலானை' பார்த்து ரசித்துவிட்டு வரலாம். படத்தின் கிராபிக்ஸின் தரத்துக்கு சமரசமில்லாத உழைப்பை வழங்கிய படக்குழு திரைக்கதையில் கொஞ்சம் கவனம் செலுத்தியிருந்தால் ஒரு தரமான கமர்ஷியல் படைப்பாக வந்திருப்பான் 'அயலான்'.

## வரலாறு உலகம்

# பாகிஸ்தானில் வீட்டிற்குள் கிடந்த 11 சடலங்கள்

## விஷம் வைத்துக் கொலையா



**பாகிஸ்தான் : ஜன. 13,**

**பாகிஸ்தானில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 11 பேர் சடலங்களாக கண்டெடுக்கப்பட்டுள்ளது அந்நாட்டில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.**

பாகிஸ்தானில் கைபர் பக்துன்க்வாவில் உள்ள லக்கி மார்வாட் மாவட்டத்தில் தக்தி கேல் என்ற கிராமத்தில் உள்ள ஒருவீட்டில் இருந்து துர்நாற்றம் கிளம்புவதாக அங்கிருந்த மக்கள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை போலீஸாருக்குத் தகவல் தெரிவித்தனர். அதையடுத்து அங்கு விரைந்து வந்த போலீஸார், வீடு முழுவதும் பிணங்களாக கிடைப்பதைக் கண்டு அதிர்ச்சி அடைந்தனர்.

அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் அடையாளம் காட்டியதில் அந்த வீட்டில் வசித்து வந்த சகோதரர்கள் இருவர், அவர்களது மனைவிகள், குழந்தைகள் மற்றும் விருந்தினர் உட்பட மொத்தம் 11 பேர் அங்கு சடலங்களாக கிடந்ததைக் கண்டறிந்தனர். அவர்களின் சடலங்களைக் கைப்பற்றி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்த போலீஸார், இதுகுறித்த விசாரணையைத் தொடங்கியுள்ளனர்.

உணவில் விஷம் கலந்து அருந்தியதால் அவர்கள் கொல்லப்பட்டு இருக்கலாம் என்ற முதற்கட்ட தகவல்கள் தெரிய வந்துள்ள நிலையில் இது தற்கொலையா அல்லது கொலையா என்று போலீஸார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். மேலும் அங்கு கிடைத்துள்ள தடயங்களின் அடிப்படையில் அந்த குடும்பத்தினரின் உணவில் விஷம் கலந்து கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று போலீஸார் தகவல் தெரிவித்துள்ளனர்.

இது சொத்துக்காக நடந்த கொலையா அல்லது வேறு ஏதேனும் காரணங்களுக்காக நடந்ததா? ஏதேனும் அமைப்பைச்சேர்ந்தவர்களால் இந்த கொலைகள் நடத்தப்பட்டு இருக்கலாமா என்கிற கோணத்தில் போலீஸார் தொடர் விசாரணை நடத்தி வருகின்றனர். ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 11 பேர் படுகொலை செய்யப்பட்டிருப்பது பாகிஸ்தானில் பெரும் பரபரப்பையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.

# பிரபல ஓப்பன் ஏஐ நிறுவனத்தின் சிஇஓ சாம் ஆல்ட்மேன் தனது நெருங்கிய நண்பரை மணந்தார்





**புதுடெல்லி : ஜன. 13,**

**ஓப்பன் ஏஐ நிறுவனத்தின் சிஇஓவான சாம் ஆல்ட்மேன் தனது நெருங்கிய நண்பரான ஆலிவர் முல்ஹெரினை திருமணம் செய்து கொண்டார். இது தொடர்பான புகைப்படங்கள் சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.**

ஓப்பன் ஏஐ நிறுவனத்தின் சிஇஓவாக சாம் ஆல்ட்மேன் செயல்பட்டு வருகிறார். அண்மையில் அவர் அந்த நிறுவனத்தில் இருந்து நீக்கப்பட்டார். அதன் பிறகு அந்த நிறுவனத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் சிலர் தங்களது அதிருப்தியை வெளிப்படுத்தினர். இந்நிலையில், அவர் மீண்டும் அந்த பொறுப்பில் நியமனம் செய்யப்பட்டார். தற்போது, ஆல்ட்மேன் தனது நெருங்கிய நண்பரான ஆலிவர் முல்ஹெரினை (38 வயது) நேற்று முன்தினம் வியாழக்கிழமை திருமணம் செய்து கொண்டார். அவர்கள் இருவரும் மோதிரம் மாற்றி திருமணம்செய்துகொண்டனர். ஹவாயில் இந்த திருமண விழா மிகவும் எளிமையான முறையில் நடந்தது. இது தொடர்பான புகைப்படங்கள் சமூக வலை தளங்களில் வைரலாகி வருகிறது.

ஆலிவர் முல்ஹெரின் ஆஸ்திரேலியாவை சேர்ந்தவர் ஆவார். இவர் மென்பொருள் துறையில் பொறியியல் படிப்பை முடித்துள்ளார். Meta, Broadwing, SPARK Neuro மற்றும் IOTA Foundation ஆகிய நிறுவனங்களிலும் பணியாற்றி இருக்கிறார். தற்போது ஐஓடி (IoT) எனும் இன்டர்நெட் ஆஃப் திங்ஸ்துறையில்நிபுணத்துவம் பெற்று விளங்குகிறார்.

கடந்த ஆண்டு பிரதமர் நரேந்திர மோடி அமெரிக்கா சென்றிருந்தார். அப்போது அங்கு முன்னணி நிறுவனங்களின் தலைவர்களுக்கு இரவு விருந்து ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. இதில் சத்யா நாதெல்லா, சுந்தர் பிச்சை உள்பட பலர் பங்கேற்றனர். இதில் சாம் ஆல்ட்மேன்-ஆலிவர் முல்ஹெரினும் பங்கேற்றது கவனம் பெற்றது. அப்போது தங்களது திருமண விருப்பத்தை தெரிவித்ததாக கூறப்படுகிறது.

அதோடு, சாம் ஆல்ட்மேன் செப்டம்பர் 2023 இல் நியூயார்க் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில், தானும் முல்ஹெரினும் விரைவில் குழந்தைகளைப் பெற விரும்புவதாகக் கூறியிருந்தார். இந்நிலையில் தற்போது, சாம் ஆல்ட்மேனுடன் திருமணத்தின்போது எடுத்துக் கொண்டே போட்டோவை ஆலிவர் முல்ஹெரின் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பகிர்ந்துள்ளார். அதில் அவர், "எனது சிறந்த நண்பரையும், என் வாழ்க்கையின் காதலையும் திருமணம் செய்து கொண்டேன்" என தெரிவித்துள்ளார்.

# 1 லி. பாட்டில் குடிநீரில் 2.40 லட்சம் நேனோ பிளாஸ்டிக் துகள்கள்

## அமெரிக்க ஆய்வில் அதிர்ச்சி தகவல்

**அமெரிக்கா : ஜன. 13,**

**நாம் அன்றாடம் பயன்படுத்தும் பிளாஸ்டிக் பாட்டில் குடிநீரில் பிளாஸ்டிக் துகள்கள் கலந்திருக்கும் என்பது நாம் ஓரளவுக்கு அறிந்ததே. ஆனால், அதன் அளவு என்ன என்பதுதான் சமீபத்திய அமெரிக்க அறிவியல் ஆய்வில் வெளிவந்துள்ள அதிர்ச்சி தகவலாகும். அதாவது, ஒரு லிட்டர் பிளாஸ்டிக் பாட்டில் குடிநீரில் சுமார் 2,40,000 நேனோ பிளாஸ்டிக் துகள்கள் கலந்திருக்கின்றன என்பதுதான் அந்த எச்சரிக்கை தரும் ஆய்வுத் தகவலாகும்.**

பேக்கேஜ் தண்ணீரை விற்கும் நிறுவனங்கள் தாங்கள் எடுக்கும் தண்ணீர் மிகவும் சுத்தபத்தமான இடங்களிலிருந்து எடுக்கப்படுவதாக விளம்பரம் செய்கின்றன. ஆனால், அதில் கண்களுக்கு புலப்படாத நேனோ பிளாஸ்டிக் துகள்கள் லட்சக்கணக்கில் மிதக்கின்றன என்பதுதான் இப்போதைய ஆய்வு நம்மை எச்சரிக்கும் ஒரு தகவல்.

அமெரிக்காவின் கொலம்பியா மற்றும் ரட்ஜர்ஸ் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் இந்த முக்கியமான ஆய்வை மேற்கொண்டு முடிவுகளை அறிவித்துள்ளனர். இந்த ஆய்வின் முடிவுகள் 'Proceedings of the National Academy of Sciences' என்ற ஆய்விதழில் வெளியாகியுள்ளது. அதாவது நுண்ணிய பிளாஸ்டிக் துகள் ஒருலிட்டர் தண்ணீர் பாட்டிலில் சுமார் 1 லட்சம் முதல் 4 லட்சம் துணுக்குகள் வரை உள்ளதாக இவர்கள் கூறுகின்றனர். சராசரியாக 2,40,000 பிளாஸ்டிக் துகள்கள் நீரில் இருப்பதாகக் கண்டுப்பிடித்துள்ளனர்.

புதிதான லேசர் தொழில்நுட்பத்தைக் கொண்டு, அதாவது நுண்ணிதின் நுண்ணிய துகள்களையும் கண்டறியும் தொழில்நுட்பம் மூலம் பிளாஸ்டிக் கண்டெய்னர் தண்ணீரில் கலந்திருக்கும் பிளாஸ்டிக் துகள்களின் அளவுகளைக் கண்டறிந்துள்ளனர். இந்த பிளாஸ்டிக் துகள்கள் பெரும்பகுதி பாட்டிலிலிருந்தே வருவதுதான் என்கிறது இந்த ஆய்வு.

அசோசியேட் பிரஸ் செய்திகளின்படி, பாட்டில் தண்ணீரைச் சுத்தப்படுத்தும் போது அசுத்தங்களைத் தடுக்கப் பயன்படும் ரிவர்ஸ் ஆஸ்மாசிஸ் வடிகட்டி மூலம் மீதி துகள்கள் தண்ணீரில் வந்தடைகின்றன.

இந்த ஆய்வுக்காக ஒரு மூன்று பிராண்ட் தண்ணீர் பாட்டில்களை சோதனைக்குட்படுத்தினர். ஆனால் அந்த 3 பிராண்ட் என்னவென்பதை அவர்கள் வெளியிடவில்லை. ஏனெனில் பிளாஸ்டிக் பாட்டில் தண்ணீர் என்பதிலேயே பிளாஸ்டிக் துகள்கள் கலந்திருக்கும் எனும்போது இந்த நிறுவனங்களின் பிராண்ட் என்று தனிமைப்படுத்த விரும்பவில்லை என்கின்றனர். ஆனால், இந்த பிராண்ட்கள் மிகவும் பிரபலமாக அமெரிக்காவில் புழங்கி வருபவை வால்மார்ட்டில் கிடைப்பவைதான் என்கின்றனர் ஆய்வாளர்கள். பெட் பாட்டில்கள் என்று சுருக்கமாக அழைக்கப்படுவதன் விரிவு Polyethylene terephthalate என்பதுதான்.



இதன் மனித ஆரோக்கியம் தொடர்பான தாக்கங்கள் இன்னும் முழுவதும் ஆய்வு செய்யப்படவில்லை என்றாலும் ஆய்வாளர்கள் கூறுவதென்னவெனில் 'இவை திசுக்களில் நுழையும் தன்மை கொண்டது. செல்களில் இதன் தாக்கம் என்னவென்பதை தற்போது ஆய்வு செய்து வருகிறோம்" என்று இந்த ஆய்வில் ஈடுபட்ட ரட்ஜர்ஸ் பல்கலைக் கழக நச்சு இயல் ஆய்வாளர் பீபேஸ்டேப்பிள்டன் கூறியுள்ளார்.

மேலும், நேனோ துகள்கள் என்பதால் இது ரத்தத்தில் கலந்தால் ஏற்படும் நோய்க்கூறுகள் பற்றியும் ஆய்வுகள் தேவைப்படுகிறது என்பதை ஆய்வாளர்கள் ஒப்புக் கொண்டுள்ளனர். இந்த ஆய்வில் ஈடுபட்ட 4 ஆய்வாளர்களும் தாங்கள் இந்த ஆய்வுக்குப் பிறகு பாட்டில் அடைக்கப்பட்ட தண்ணீரை பயன்படுத்துவதை நிறுத்தியுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

# ஹவுதி படைகளைக் குறிவைத்து வான்வழி தாக்குதல்

## அமெரிக்கா – பிரிட்டன் படைகள் தீவிரம்



**வாஷிங்டன் : ஜன. 13,**

**ஏமன் நாட்டில் ஹவுதிகள் தொடர்புடைய இலக்குகள் மீது அமெரிக்காவும், பிரிட்டனும் தாக்குதல் நடத்தியுள்ளன. கடந்த ஆண்டு இறுதியில் செங்கடலில் சர்வதேச கப்பல்கள் மீது ஹவுதிகள் நடத்திய தாக்குதல்களைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.**

இத்தாக்குதல்களை ஏமனில் உள்ள சாட்சிகளும் உறுதிப்படுத்தியுள்ளன. இந்தநிலையில் அமெரிக்க அதிபர் ஜோ பைடன். "தேவைப்பட்டால் மேலும் நடவடிக்கை எடுக்கத் தயங்கமாட்டோம்" என்று எச்சரிக்கை விடுத்துள்ளார். நேற்று முன்தினம் வியாழக்கிழமை அவர் வெளியிட்ட அறிக்கையில், "எங்களுடைய மக்களுக்கு எதிரான நடவடிக்கைகள் மற்றும் கப்பல்கள் செல்லும் வழித்தடத்தின் சுதந்திரத்தை கெடுக்கும் எந்த செயலையும் நாங்களோ எங்களது கூட்டாளிகளோ பொறுத்துக்கொள்ள மாட்டோம் என்பதை இந்தத் தாக்குதல்கள் தெளிவாக உறுதிப்படுத்துகின்றன.

ஹவுதிகள் நேரடியாக அமெரிக்க கப்பல்கள் மீது தாக்குதல்கள் நடத்தியுள்ளனர். செங்கடல் வணிக பாதையைப் பாதுகாக்க அமெரிக்க தலைமையிலான 'ஆபரேஷன் ப்ராஸ்பெரிட்டி கார்டியன்'-க்கு 20க்கு அதிகமான நாடுகள் ஆதரவு தெரிவித்துள்ளன. ஆஸ்திரேலியா, பெஹ்ரைன், கனடா மற்றும் நெதர்லாந்து இந்த ஆபரேஷனை ஆதரித்துள்ளன. என்றாலும் தற்போதைய அமெரிக்க, பிரிட்டன் தாக்குதல் அந்த ஆபரேஷனுடன் தொடர்புடையது இல்லை. ஹவுதிகளின் பொறுப்பற்ற தாக்குதல்களுக்கு சர்வதேச சமூகத்தின் பதிலடி ஒற்றுமையானது உறுதியானது" என்று அமெரிக்க அதிபர் தெரிவித்துள்ளார். பிரிட்டன் பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், "வணிகக் கப்பல்களை அச்சுறுத்தும் ஹவுதிகளின் தாக்குதல்களுக்கு எதிரான முதல் அடி இது" என்று தெரிவித்துள்ளது.

தலைநகர் சானா, சாதா, தாமர் மற்றும் ஹொடைடா பகுதிகளில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளன என்பதை ஹவுதி அதிகாரிகள் உறுதி செய்துள்ளனர். இந்த தாக்குதல்களை அவர்கள், 'அமெரிக்கா - சியோனிஸ்ட் - பிரிட்டிஷ் ஆக்கிரமிப்பு' என்று வர்ணித்துள்ளனர்.

தாக்குதல் குறித்து பெயர் வெளியிட விரும்பாத அமெரிக்க அதிகாரி ஒருவர், "விமானம், கப்பல் மற்றும் நீர்மூழ்கி மூலமாக தாக்குதல் நடத்தப்படுகின்றன. 12-க்கும் மேற்பட்ட இடங்களில் தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன. இந்த தாக்குதல்கள் ஹவுதிகளின் ராணுவவலிமையைபலவீனப்படுத்துவதற்கானது. இது வெறும் அடையாளத்துக்கான தாக்குதல் இல்லை" என்றார்.

சானா விமானநிலையம் அருகில்உள்ளராணுவதளம், டைஸ் விமான நிலையம் அருகே உள்ள ராணுவ தளம், ஹொடைடாவில் உள்ள ஹவுதிகளின் கப்பல் தளம் மற்றும் ஹஜ்காவில் உள்ள ராணுவத் தளங்களின் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடத்தப்பட்ட இந்தத் தாக்குதல்களுக்கு தக்க பதிலடி கொடுக்கப்படும் என்று ஹவுதி தலைவர் ஒருவர் தெரிவித்தார்.

செங்கடல் பாதையில் செல்லும் சர்வதேச கப்பல்கள் மீது நடத்தப்படும் இந்த தாக்குதல்களை நிறுத்துமாறு ஐக்கிய நாடுகள் சபை மற்றும் சர்வதேச நாடுகள் அழைப்பு விடுத்தும் ஹவுதிகள் அதற்கு செவி சாய்க்கவில்லை. கடந்த அக்டோபரில் இஸ்ரேல் - ஹமாஸ் போர் வெடித்தில் இருந்து ஏமனில் இயங்கி வரும் ஹவுதிகள் செங்கடலில் கப்பல்கள் மீது ஏவுகணை மற்றும் ஆளில்லா விமானங்கள் மூலமாக தாக்குதல் நடத்தி வருகின்றனர். ஹமாஸ்களுக்கு ஆதரவளிக்கும் விதமாக இந்தத் தாக்குதல்கள் நடத்தப்படுவதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

ஏமன் உள்நாட்டுப் போரில் பெரும் பகுதியை கைப்பற்றிய ஹவுதிகள் ஹமாஸ்களுக்கு ஆதரவாக இஸ்ரேஸ் துறைமுகத்துக்கு செல்லும் அந்நாட்டுடன் தொடர்புடைய கப்பல்கள் மீது தாக்குதல் நடத்துவதாக தெரிவித்திருந்தனர் என்றாலும் தாக்கப்பட்ட கப்பல்களில் பெரும்பாலானவை இஸ்ரேலுடன் தொடர்பு இல்லாதவை என்பது குறிப்பிடத்தக்கது.

ஐரோப்பா - ஆசியா இடையேயான கப்பல் போக்குவரத்தில் 15 சதவீதம் பங்கு வகிக்கும் முக்கிய கடல் வணிகப்பாதையான செங்கடல் பாதையில் இதுவரை 27 கப்பல்கள் மீது ஹவுதிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர். ஏடன் வளைகுடாவில் உள்ள சர்வதேச கப்பல் பாதையில் ஹவுதிகள் கப்பல் எதிர்ப்பு பால்லிஸ்டிக் ஏவுகணைத் தாக்குதல் நடத்தியதாக அமெரிக்க ராணுவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை தெரிவித்தது. கடந்த நவ.19 ம் தேதியில் இருந்து நடந்த தாக்குதல்களில் இது 27-வது தாக்குதலாகும். ஜன. 9ம் தேதி செங்கடலில் ஹவுதிகள் நடத்திய மிகப்பெரிய தாக்குதல்களுக்கு சில நாட்களுக்கு பின்னர், அமெரிக்காவும், பிரிட்டனும் ஏமன் மீதான இந்தத் தாக்குதல் சம்பவத்தில் ஈடுபட்டுள்ளன.

# அப்படி மட்டும் நடந்தால் அணு ஆயுதத்தை கையில் எடுப்போம் : ரஷ்யா பகிரங்க மிரட்டல்



**மாஸ்கோ : ஜன. 13,**

**ரஷ்யாவுக்கு எதிரான போரில் உக்ரைனுக்கு அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகள் ஆயுதம், நிதி உதவி உள்ளிட்டவைகளை அளித்து வருகின்றன.**

உக்ரைன் நேட்டோ கூட்டமைப்பில் சேருவதற்கு எதிர்ப்பு தெரிவித்து அந்த நாட்டின் மீது கடந்த 2022 -ம் ஆண்டு பிப்ரவரி மாதம் ரஷ்யா போர் தொடுத்தது. இரு நாடுகளுக்கும் இடையேயான சண்டை கிட்டதட்ட இரண்டு ஆண்டு காலமாக நடைபெற்று வருகிறது. இதில் ஏராளமான உயிர்சேதம் மற்றும் பொருளாதார இழப்புகளை இருநாடுகளும் சந்தித்துள்ளன. உக்ரைனுக்கு அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகள் ஆயுத உதவி, நிதி உதவி அளித்து வருவதால் ரஷ்யாவை எதிர்த்து தீவிரமாக சண்டையிட்டு வருகிறது.

இந்த நிலையில், உக்ரைன் மேற்கத்திய நாடுகளின் ஏவுகணைகளை பயன்படுத்தினால் அணு ஆயுதத்தை கையில் எடுப்போம் என்று ரஷ்யா பகிரங்க மிரட்டல் விடுத்துள்ளது. ரஷ்யாவின் பாதுகாப்பு கவுன்சில் தலைவர் டிமிட்ரி மெத்வதேவ் இது தொடர்பாக கூறும்போது, "அமெரிக்கா வழங்கிய ஏவுகணைகளை உக்ரைன் பயன்படுத்த நினைக்கிறது. இதை தற்காப்பாக கருத முடியாது. ஆனால், போரில் அணு ஆயுதத்தை ரஷ்யா பயன்படுத்துவதற்கான அடிப்படை விஷயமாக இது அமையும்" என்று கூறியுள்ளார்.

# மும்பை தாக்குதலுக்கு சதிதிட்டம் தீட்டிய லஷ்கர் பயங்ரவாதி அப்துல் சலாம் மரணம் – ஐ.நா. தகவல்

**இஸ்லாமாபாத் : ஜன. 13,**

**கடந்த 2008-ம் ஆண்டு நவம்பர் 11-ந்தேதி மும்பைக்கு பயங்ரதீவிரவாதிகள் புகுந்து தாக்குதல் நடத்தினர்.**

இதில் 166 பேர் பலியானார்கள். தாக்குதலில் ஈடுபட்ட 9 பயங்கரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர். உயிருடன் பிடிக்கப்பட்ட அஜ்மல் கசாப் தூக்கிலிடப்பட்டான். இந்த தாக்குதலை பாகிஸ்தானின் லஷ்கர் இ தொய்பா பயங்கரவாத அமைப்பு நடத்தியது. அந்த அமைப்பின் பயங்ரவாதிகளை இந்தியா தேடி வருகிறது.

இந்நிலையில், மும்பை தாக்குதலுக்கு சதித்திட்டம் தீட்டிய முக்கிய பயங்கரவாதிகளில் ஒருவரும் லஷ்கர் இ தொய்பா நிறுவனர்களில் ஒருவருமான ஹபீஸ் அப்துல் சலாம் பட்டாவி பாகிஸ்தானில் மரணம் அடைந்துவிட்டதாக ஐ.நா. சபை தெரிவித்துள்ளது.

77 வயதான அப்துல் சலாம் பட்டாவி பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தில் உள்ள முரிட்கேயில் பாகிஸ்தான் அரசாங்கத்தின் காவலில் இருந்தபோது மாரடைப்பால் இறந்ததாக ஐநா தனது அதிகாரப்பூர்வ இணையதளத்தில் தெரிவித்துள்ளது. அப்துல் சலாம் பட்டாவியை ஐ.நா பாதுகாப்பு கவுன்சில் கடந்த 2012-ம் ஆண்டு பயங்கரவாதியாக அறிவித்தது. பயங்கரவாத செயல்களுக்கு நிதி திரட்டியதாக பாகிஸ்தானில் இவர் பல முறை கைது செய்யப்பட்டார். கடந்த 2020-ம் ஆண்டு அவருக்கு ஒரு வழக்கில் 16.5 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டது.



மும்பை பயங்கரவாத தாக்குதலுக்கு சில நாட்களுக்குப் பிறகு, லஷ்கர் இ தொய்பா தலைவர் ஹபீஸ் சயீத் கைது செய்யப்பட்ட சமயத்தில் அப்பொறுப்பை அப்துல் சலாம் பட்டாவி ஏற்றார் என்பது குறிப்பிடதக்கது.

# ரஷ்யாவை வாட்டி வதைக்கும் பனிப்புயல் வீடுகளுக்குள் முடங்கிய பொதுமக்கள்



**ரஷ்யா : ஜன. 13,**

**ரஷ்யாவில் வீசி வரும் பனிப்புயலால் மக்களின் இயல்பு வாழ்க்கை வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது.**

ரஷ்யா தலைநகர் மாஸ்கோவில் வெப்பநிலை மிகவும் குளிர்ச்சியாக இருப்பதால் அன்றாட தேவைகளுக்கு வெளியே செல்ல முடியாமல் மக்கள் வீடுகளுக்குள்ளேயே முடங்கியுள்ளனர்.

கடுங்குளிரில் இருந்து சமாளிக்கவழங்கப்படும்ஹீட்டர் சேவை கடந்த சில நாட்களாக இயங்கவில்லை என்றும் கூறப்படுகிறது. இந்நிலையில், உரிய நடவடிக்கை எடுக்கும் வகையில் ஹீட்டர் சேவை வழங்கி வரும் ஆலையில் விதிமீறலில் ஈடுபட்ட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் மின்சார கம்பிகள் மீது அதிகளவிலான பனி படிந்திருப்பதால் மின்சாதன பொருட்களை இயக்க முடியாமல் தவிப்பதாக உள்ளூர் மக்கள் தெரிவிக்கின்றனர்.

# வாழ்க்கையை மாற்றியமைத்த கொரோனா

## விமானத்தில் 900 கி.மீ தூரம் அலுவலகம் செல்லும் ஊழியர்



**ஒஹியோ : ஜன. 13,**

**அமெரிக்காவின் வால் ஸ்ட்ரீட் ஜெனரல் பத்திரிகை நிருபர் ஒருவர் தினமும் விமானத்தில் தான் அலுவலகம் சென்று வருகிறார் என்ற தகவல் அனைவரையும் வியப்புக்குள்ளாக்கியுள்ளது.**

இன்றைய வாழ்க்கைச் சூழலில் தினமும் அலுவலகம் சென்று வருவதற்குள் நம்மில் பலருக்கும் போதும் போதும் என்று ஆகிவிடுகிறது. மூச்சு முட்ட வைக்கும் போக்குவரத்து நெரிசலும், நுரையீரலை பதம் பார்க்கும் காற்று மாசும் வெளியில் கிளம்பி வீடு திரும்புவதற்குள் ஒரு வழியாக்கி விடுகின்றன. ஆனால், இத்தகைய சிரமங்கள் எதுவுமின்றி தனது அலுவலகத்திற்கு 900 கிலோ மீட்டர் விமானத்தில் சென்று வருகிறார் அமெரிக்க பத்திரிகையாளர் சிப் கட்டர்.

அமெரிக்காவின் ஒஹியோவில் வசிப்பவர் சிப் கட்டர். அமெரிக்காவின் பிரபல பத்திரிகையான வால் ஸ்ட்ரீட் ஜெர்னலின் நிருபரான இவர், கொரோனா காலத்திற்கு முன்பு நியூயார்க்கில் தான் வசித்து வந்தார். கொரோனாவுக்காக நியூயார்க் வசிப்பிடத்தைக் காலி செய்துவிட்டு ஒஹியோவுக்கு வந்தார். அங்கிருந்தவாறு அலுவலகப் பணியை மேற்கொண்டு வந்தார். ஒஹியோவின் வாழ்க்கை சூழல் அவருக்கு மிகவும் பிடித்து விட்டது.

பின்னர் கொரோனா தொற்று படிப்படியாக குறைந்து இயல்பு நிலைக்குத் திரும்பிய நிலையில் அலுவலகத்திற்குச் செல்ல வேண்டிய சூழல் அவருக்கு ஏற்பட்டது. ஆனால் அவர் மீண்டும் நியூயார்க் சென்று தங்க விரும்பவில்லை. அங்குள்ள வாழ்க்கை சூழல் அவருக்கு ஒத்து வரவில்லை.

அதனால் நியூயார்க்கிற்கு செல்லாமல் ஒஹியோவில் இருந்து விமானம் மூலம் அலுவலகம் சென்று வருகிறார். வாரத்திற்கு மூன்று முறை ஒஹியோவில் இருந்து நியூயார்க்கிற்கு விமானம் மூலம் அலுவலகம் சென்று வருகிறார். ஒஹியோவில் இருந்து நியூயார்க் சென்று திரும்ப சுமார் 900 கிலோ மீட்டராகிறது. இந்த தொலைவுக்குப் பயணித்து அவர் அலுவலகம் சென்று வருகிறார்.

வாரத்தில் மூன்றுமுறை, தான் இப்படி பயணம் செய்து அலுவலகத்திற்கு சென்று வருவதாக தெரிவித்த அவர், இது நியூயார்க்கில் வாழ்வதை விட மிகவும் மலிவாக இருப்பதாக தெரிவித்துள்ளார். முன்னதாக நியூயார்க்கில் உள்ள ஸ்டுடியோ குடியிருப்பில் வசித்து வந்த அவர் அதற்காக மாதம் 3,200 டாலர்கள் செலவு செய்துள்ளார். அதாவது இந்திய மதிப்பில் சுமார் 2,65,581 ஆகும். இத்தகைய சூழலில் விமான பயணமே சிறந்ததாகவும். மலிவானதாகவும் இருப்பதாக கருதுகிறார் கட்டர்.


# பாகிஸ்தானில் வாட்டும் கடுங்குளிர் நிமோனியா தொற்றால் 36 குழந்தைகள் உயிரிழப்பு

**இஸ்லாமாபாத் : ஜன. 13,**

**பாகிஸ்தானில் கடுங்குளிர் காரணமாக குழந்தைகள் பெருமளவில் நிமோனியா காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளதுடன், பாதிக்கப்பட்ட குழந்தைகளில் 36 பேர் கடந்த வாரம் உயிரிழந்துள்ளதாக பஞ்சாப் மாகாண அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.**

பாகிஸ்தானில் கடுங்குளிர் நிலவி வருகிறது. குறிப்பாக பஞ்சாப் மாகாணத்தில் அதிக அளவில் குளிர் வாட்டி வதைக்கிறது. கடுங்குளிர் காரணமாக குழந்தைகள் பெருமளவில் நிமோனியா காய்ச்சலால் பாதிக்கப்படுகின்றனர்.


மேலும், நிமோனியாவால் பாதிக்கப்படும் குழந்தைகள் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், வருகிற 31ம் தேதி வரை பள்ளிகளில் காலை கூட்டத்திற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது. முன்பள்ளி குழந்தைகளுக்கு வருகிற 19ம் தேதி வரை தடுப்பூசி செலுத்த அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் குளிர் காலநிலையில் இருந்து குழந்தைகளை பாதுகாக்க அடிப்படை சுகாதார வழிமுறைகளும் வெளியிடப்பட்டுள்ளது.



அதன்படி குழந்தைகள் மாஸ்க் அணிய வேண்டும், கைகளை சுத்தமாக கழுவ வேண்டும், வெதுவெதுப்பான ஆடைகள் அணிய வேண்டும். இவைகள் நிமோனியா தொற்றிக் கொள்வதில் இருந்து குழந்தைகளை பாதுகாக்கும். இருமல், காய்ச்சல் அல்லது தொண்டை வலி போன்ற அறிகுறிகள் உள்ள குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பக் கூடாது என்றும் பெற்றோர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. நியோனியாவில் இருந்து குழந்தைகளை பாதுகாப்பது குறித்து பஞ்சாப் மாகாண காபந்து முதலமைச்சர் நக்வி, மூத்த டாக்டர்களுடன் ஆலோசனை நடத்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.


# அமைச்சர் செந்தில்பாலாஜியின் ஜாமீன் மனு 3-வது முறையாக தள்ளுபடி





# சென்னை உயர் நீதிமன்றத்தில் கோடநாடு வழக்கில் எடப்பாடி பழனிசாமியின் சாட்சியப் பதிவு தாக்கல்

# பெரியார் பல்கலை துணைவேந்தர் ஜாமீன் வழக்கு : ஜன.19-ல் விசாரணை




சென்னை / புதுக்கோட்டை | 13.01.2024 | varalaruu.com | பக்கம்:6 | ரூ.10

புதுகை வரலாறு நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

செ. அச்சுத மேனன் , இந்திய இடதுசாரி அரசியல்வாதி, கேரள முன்னாள் முதலமைச்சர் (பி.1913) (இ.1991)



சிவக்குமார் சர்மா , இந்திய இசையமைப்பாளர் (பி.1938) (இ.2022)



ஆர். பாலச்சந்திரன் , தமிழகக் கல்வியாளர், கவிஞர் (பி.1946) (இ.2009)



ராகேஷ் சர்மா , இந்திய விண்வெளி வீரர் (பி.1949)



## இன்றைய நினைவு நாள்

கனகசபை சிவகுருநாதன் , ஈழத்து எழுத்தாளர் (பி.1920) (இ.2013)



அஞ்சலிதேவி , தென்னிந்தியத் திரைப்பட நடிகை (பி.1927) (இ.2014)



ஜி. ஏ. வடிவேலு , இந்திய விடுதலைப் போராட்ட செயற்பாட்டாளர், அரசியல்வாதி (பி.1925) (இ.2016)



ஜெ. எப். ஆர். ஜேக்கப் , இந்தியத் தரைப்படைத் தளபதி (பி.1923) (இ.2016)

